Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00




தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 19 திங்கட்கிழமை (05.12.2011) பக்கங்கள் 16 ஓசை – 65













## இலங்கையின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடவில்லை


இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யவில்லை என அமெரிக்கா அறிவித்துள்ளது. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில் அமெரிக்கா அழுத்தங்களை பிரயோகிப்பதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுடன், அமெரிக்கத் தூதரக அதிகாரி நடத்திய சந்திப் பின்போது சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரப்பட்டிருந்தது. எனினும், சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை என அமெரிக்க அறிவித்துள்ளது.

மைத்திரிபால சிறிசேனவுடன் நடைபெற்ற சந்திப்பு சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக அல்ல எனவும் குறிப்பிடப்பட் டுள்ளது. பல்வேறு விடயங்கள் குறித்து பேசப்பட்டதாகவும், அவை தொடர்பில் கருத்து வெளியிடமுடியாது எனவும் அமெரிகத் தூதரக அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

## முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாத அரசியல் தீர்வு வெற்றி பெறாது

### என்கிறார் அமைச்சர் ஹக்கீம்




முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாத அரசியல் தீர்வுத்திட்ட பொறிமுறைமை வெற்றியளிக்காது என ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள் ளார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பா விட்டால், முஸ்லிம் தரப்பை உள்ளடக்கிய வேறும் ஓர் பொறி முறைமையின் ஊடாக தீர்வுகாண வேண்டு மென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டும்

### ஜனாதிபதியை கோருகிறது அமெரிக்கா



(கொழும்பு)

உண்மைகளைக் கண்டறி வதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்வதற்கு, இலங்கைக்கான தமது தூதுவர் பற்றீசியா புட்டினீஸை அனுமதிக குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னதாக ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப் பிக்கப்பட உள்ளதாகவும், அறிக் கையைச் சமர்ப்பித்தவுடன், ஜனாதிபதி சிறப்பு உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாகவும் தெரிவிக் கப்படும் நிலையிலேயே, தனது தூதுவரை, ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்வதற்கு அனுமதிக்குமாறு அமெரிக்கா

(15 ஆம் பக்கம் பார்க்க)

## தலைமைக்குப் போட்டி கரு ஜயசூரிய இணக்கம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்காக, கட்சியின் இணைப் பிரதித் தலைவர் கருஜயசூரிய போட்டியிடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமைப் பதவிக்காக போட்டியிடுமாறு கட்சியின் மற்றுமொரு இணைப் பிரதித் தலைவரான சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட கட்சியின் பலர் கரு ஜய சூரியவிடம் கோரியிருந்தனர்.

சஜித் பிரேமதாஸ எழுத்து மூலமாக இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கட்சித் தலைமைத்துவம் உள்ளிட்ட முக்கிய பொறுப்புக்களுக்கான தேர்தல்கள் குறித்து செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் எனகட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுளளார்.

## நாடாளுமன்ற தெரிவுக்குழு விவகாரம் ஜனாதிபதியுடன் பேச கூட்டமைப்பு முடிவு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறும் வகையில் கூட்டமைப்பில் பங்குபற்றவுள்ளவர்களின் பெயர்களை வழங்குமாறு அரச தரப்பு பிரதிநிதிகள் கோரியுள்ள நிலையில், இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்குக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அரசு கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்கிடையே 15 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை இடம்பெற்ற வேளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கவுள்ள கூட்டமைப்பினரின் பெயர்களைத் தருமாறு அரச தரப்பு பிரதிநிதிகள் கோரியதை அடுத்து தம்மால்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா குறித்த மனுவை ஜனாதிபதியிடம் கையளிக்கலாம்

### பந்துல ஜயசேகர கூறுகிறார்


(கொழும்பு)

சிறையில் உள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் குடும்பத்தினர் பொன்சேகாவின் விடுதலைக்கு வெள்ளை மாளிகையிடம் விண்ணப்பிக்காமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் விண்ணப்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் மனைவி அனோமாவும் அவருடைய மகளமாரும் சரத் பொன்சேகா தொடர்பில் அமெரிக்காவிடம் மனு ஒன்றை கையளிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக தமக்கு அறியக்கிடைத்ததாக பந்துல ஜெயசேகர குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் நியூயோர்க்கில் உள்ள அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு செல்லாமல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாக தமது விண்ணப்பத்தை மேற்கொள்ளலாம் என்று பந்துல சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி நிச்சயமாக அவர்களின் கோரிக்கையை கருணையுடன் பரிசீலிப்பார் என்று குறிப்பிட்டுள்ள பந்துல ஜெயசேகர, கொழும்பு 3 இல் இலங்கை



ஜனாதிபதியின் வாசஸ்தலம் அமைந்துள்ளது. எனினும், அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலம்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மொழியைப் பேசமுடியாமைக்கு வெட்கப்படுகிறாராம் ஹெகலிய



எனக்குத் தமிழ் மொழியில் ஐந்து வார்த்தைகள் பேச முடியுமாயின் இந்நாட்டு குடிமக்களது பெருமை மிகு தந்தைகளில் ஒருவனாக நான் திகழ்வேன் என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலியா ரம்புக்வெல்ல நேற்று கண்டி ஹந்தானை சிவானந்தா தமிழ் வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், எமது சகோதர மொழியான தமிழ் மொழியைப் பேச முடியாமைக்கு நான் வெட்கப்படுகின்றேன். ஏனெனில் இந்த நாட்டு மக்களில் 95 சதவீதத்தினருக்கு பிரதான மொழிகளான தமிழ் சிங்கள மொழிகளைப் பேசமுடியுமாயின் எமது பிரச்சினைகளில் அநேகம் வெறுமனே தீர்ந்து விடும் கடந்த முப்பது வருடங்களாக

(15 ஆம் பக்கம் பார்க்க)

## சுயாதீனமாக இயங்குவதற்கு ஐ.தே.க. எம்.பிக்கள் தீர்மானம்

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் சுயாதீனமாக இயங்குவதற்கு தீர்மானித்துள்ளனர். இந்த நடவடிக்கை கட்சி முரண்பாடுகளை மேலும் வலுவடையச் செய்யும் எனவும், தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு பெரும் நெருககடியை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலித ரங்கே பண்டார, வசந்த அலுவிஹார, பாலித தெவரப்பெரும மற்றும் திலிப் வெதாரச்சி ஆகியோரே இவ்வாறு சுயாதீனமாக இயங்க தீர்மானித் துள்ளனர்.

தேசிய முக்கியத்துவம் வாயந்த விடயங்களின் போது சுயாதீனமான தீர்மானங்கள் ஏடுக்கப்படும் என கட்சியின் தற்போதைய நிலைமை

(15 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னிந்திய நாட்டார் கலைகள் யாழ்ப்பாணத்தில் விசேட ஆற்றுகை



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கை நிலைய செயற்திறன் இயக்கத்தின் ஏற்பாட்டில் தென்னிந்திய நாட்டார் கலை ஆற்றுகை நேற்று மாலை 4.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

தென்னிந்திய பல்கலைக்கழக ஊடக மாணவர்கள், வேணுகோபாலின் நெறியாள்கையின் கீழ் ஆற்றப்பட்ட ஐந்து வகையான நாட்டார் இசை நடனங்களான, தப்பு ஆட்டம், ஒயில் ஆட்டம், சாட்டைக் குச்சி, கும்மி ஆட்டம், ஆதிவாசி நடனம் எனக் கிராமிய ஆடல்களும், பாடல்களும் இடம்பெற்றன.

நாட்டார் கலை ஆற்றுகையின் ஆடலரசன் என்று பெயர் சூட்டப்பட்ட வேணுகோபால் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் சண்முகலிங்கனினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

கிராமங்களில் வாழும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை உலகிற்கு எடுத்துரைக்க நாட்டார் கலைகள் உருவாக்கப்பட்டன. ஒடுக்கப்பட்ட சமூகம் தமது கலைகளின் மூலம் வாழ்வியல் கோலங்களைக் காட்டியுள்ளார்கள்.

இந்நாட்டார் கலை ஆற்றுகை இன்று காலை 9.00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் காலாசாலையிலும் மாலை 3.30 மணிக்கு கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரியிலும் இடம்பெறும்.(எஸ்)

# 'கலைச்சுடர்' விருதும் கௌரவமும்

(அளவெட்டி)

அண்மையில் நடைபெற்ற வலி.வடக்கு கலாசாரவிழாவில் அளவெட்டியைச் சேர்ந்த கலைஞர்கள் சிலர் கலைச்சுடர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். வருடாவருடம் கலைத்துறைக்காக தொடர்ந்து பணியாற்றி வரும் பல கலைஞர்கள் வலி.வடக்கு கலாசாரப் பேரவையினால் கலைச்சுடர் எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இம்முறை அளவெட்டியைச் சேர்ந்த திருமதி மாலாதேவி மதிவதனன், பசுபதி உதயகுமார், நடராசா சிறிஸ்கந்தராசா, சாரங்கபாணி தணிகாசலபதி ஆகியோர் இலக்கியத்துறைக்காகவும் சங்கரம்பர் கதிரவேலு இதழியல் துறைக்காகவும் பாலசுதந்திரன் நாதஸ்வரத்திற்காகவும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# பொலிஸ் அதிகாரியால் கதிரைகள் அன்பளிப்பு

(முழங்காவில்)

கௌதாரிமுனை கிராம சேவகர் பிரிவில் இயங்கிவரும் அந்தியகால சேவைச் சங்கத்தின் பயன்பாட்டிற்காக ஒரு தொகுதி பிளாஸ்ரிக் கதிரைகளை பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

மிகவும் வறிய நிலையில் வாழும் இக்கிராம மக்களின் நிகழ்வுகளுக்கு இலவசமாக இக்கதிரைகளைப் பெற்றுப் பயன்படுத்த முடியுமென அந்தியாகால சேவைச் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (112)

# புலோலி ப.நோ.கூ.சங்க பணிப்பாளர் சபை தெரிவு

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புதிய பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

யாழ்.பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர் சே.அருந்தவநாதன் தலைமையில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு இந்தத் தெரிவு நடைபெற்றது. 7 பேர் கொண்ட பணிபாளர் சபைக்கு வாக்கெடுப்பு முறையில் தேர்வு நடந்தது.

இத்தெரிவின்போது புலோலி பலநோக்குக் கூட்றவுச் சங்கத்தின் புதிய தலைவராக இராசையா பூரணசந்திரனும், உப தலைவராக முருகேசம்பிள்ளை ஜெயதேவனும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 5 புதிய நிர்வாக உறுப்பினர்களாக நாகேஷ் இராசலிங்கம், இராசையா தபேந்திரன், மகாலிங்கம் சிவபாதம், வல்லிபுரம் ரங்கன், குமரேசு கௌதமன், உள்ளிட்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

எதிரணியாக இருந்த முன்னாள் தலைவர் அணியின்ர் இத்தேர்தலில் தெரிவு செய்யப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்க புதிய அணி ஆதரவாளர்கள் சங்கத் தலைமையகத்துக்கு முன்னாள் வெடி கொளுத்தி கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது. (116)

# டெங்கு நுளம்பு பெருக்கம் காரணமானவருக்கு அபராதம்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் டெங்கு நோய் பரவும் வகையில் சூழலை அசுத்தமாக வைத்திருந்த மூன்று நபர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தினால் 6 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை உடையார் மணல் பகுதி, உடுப்பிட்டி இமையாணன் பகுதி மற்றும் பொலிகண்டி கந்தவனம் ஆகிய இடங்களில் இவ்வாறு டெங்கு நோய் பரவும் வகையில் செயற்பட்ட 3 நபர்களுக்கு எதிராக வல்வெட்டித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரம் முன்னிலையில் குறித்த மூவரையும் பொலிஸார் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி குறித்த மூவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டார். (116)

# அறநெறிப் பாடசாலை பொதுக் கூட்டம்

(நீர்வேலி)

நீர்வேலி சிறிமுருகன் அறநெறிப் பாடசாலையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் இடம் பெறவுள்ளதாகவும் அன்றைய தினம் அறநெறிப் பாடசாலையின் அவசியம் பற்றிய கருத்துரைகள் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவு என்பன இடம்பெறும் என அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

# மூத்த பிரஜைகள் நலன்புரிச் சங்கம் அரியாலையில் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை வடமேற்குப் பகுதியில் மூத்த பிரஜைகள் நலன்புரிச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் வசிக்கும் மூத்த பிரஜைகளின் நலன்களைக் கவனிக்கும் வகையிலேயே இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஜே/91 அரியாலை வடமேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மூத்த பிரஜைகளுக்கான பொதுக்கூட்டம் அண்மையில் அரியாலை சாந்தி சனசமூக நிலையப் பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது.

கிராம அலுவலர் த.தஜிதரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மூத்த பிரஜைகள் நலன்புரிச் சங்கம், மூத்த பிரஜைகள் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் திருமதி ஸ்பெல்மன் பாலகுமாரியால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதில் இச்சங்கத்திற்கான புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. அ.பாலச்சந்திரன் தலைவராகவும், பொ.நடராசா உபதலைவராகவும், கா.பீதாம்பரம் செயலாளராகவும், கி. யேசுராஜன் பொருளாளராகவும், க.பேரின்பநாயகி உபசெயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன், 4 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

# நவம்பர் மாத சமுர்த்தி நிவாரணம் தாமதமின்றி பெற்றுக் கொள்ளவும்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குள் வசிக்கும் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளில் இதுவரை தமது நவம்பர் மாதத்திற்குரிய உலருணவு நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாக தமது பிரிவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சென்று பொருட்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலக சமுர்த்தி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மாதம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நல்லூர், யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் கடந்த மாதம் 3 ஆம் வாரத்தில் நிவாரண விநியோகம் வழங்கப்பட்ட போதிலும் ரூபா 250, ரூபா 350 பெறுமதியுடைய முத்திரைப் பயனாளிகளில் கனிசமான தொகையினர் தமக்கான பொருட்களைப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும், எனவே காலதாமதமின்றி அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை, டிசம்பர் மாத நிவாரண விநியோகத்தை விரைவில் வழங்குவதற்கான ஒழுங்குகள் யாழ்.செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருதவாகத் தெரிவிக்கப்படுகின்றது. (26)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1051)


# வண்ணமய அழைப்பிதழ்கள் போட்டி நடத்துவதற்கு ஏற்பாடு

(முழங்காவில்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடமாகாண அமைச்சின் மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் 2010, 2011 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்வுகளின் அச்சிடப்பட்ட அழைப்பிதழ்களைக் கொண்ட கண்காட்சியும், போட்டியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரினால் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சிறந்ததாகத் தெரிவு செய்யப்படும் முதல் பத்து அழைப்பிதழ்களுக்கு பாராட்டும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளில் பிரதேச செயலகங்களின் கலாசாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். (112)


## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.தேசப்பந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முன கூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1102)




கோண்டாவில் இந்து மகா வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவிகளின் கலை நிகழ்வையும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (10)

முதலை தண்ணீரில் இங்குமங்கும் நீந்திக் கொண்டிருக்கிறது. ஆனால் அதன் எண்ணம் எங்கே இருக்கிறது தெரியுமா? தரையில் தன் முட்டையை வைத்திருக்கிற இடத்தில் அதன் எண்ணம் இருக்கிறது. அதே விதத்தில் உலகில் உனக்கு ஏற்பட்டுள்ள கடமைகளைச் செய்து கொண்டிரு. அதற்கிடையில் மனதைக் கடவுளிடம் வை. - ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## காற்றும் கவிதையும் வாங்கும் இடம்!

ஏழைகளுக்கெல்லாம் இலவசப் பொழுதுபோக்கை வழங்கும் மூலங்களில் கடற்கரையும் ஒன்று. பூமி எங்கும் காற்று இருந்தாலும் நாம் காற்று வாங்குவதற்காக என்று செல்லும் இடம் கடற்கரைதான். நகரங்களில் வசிப்பவர்களுக்கு இதன் அருமை இன்னும் வெகுவாகத் தெரியும். காற்று `வாங்குவதற்கென்றே வார இறுதி நாட்களை கடற்கரைக்குச் செல்ல ஒதுக்கிக்கொள்வோர் பலர். கடற்கரைக் காற்று உடம்புக்கு நல்லதென்று மருத்துவர்களும் வலியுறுத்தி வருகிறார்கள்.

அப்படிப்பட்ட கடற்கரைகள் அழிந்து வருவதை நாம் அறிந்து கொண்டிருக்கிறோமா தெரியவில்லை. நமது வனவளம் சூறையாடப்படுவதையும் காடு சார்ந்த கிராம மக்களின் வாழ்நிலை புறக்கணிக்கப்படுவதையும் பேசிவரும் ஊடகங்கள் நமது நெய்தல் வளம் சூறையாடப்படுவதை அவ்வளவாகப் பெரிதுபடுத்துவதில்லை.

நமது பல்லுயிர்ப் பெருக்கத்துக்கு ஆக்கமூட்டும் கடலும் கடல் சார்ந்த இடமும் வாழ்விப்பது பல கோடிக்கணக்கான மீனவர்களை மட்டுமல்ல; பில்லியன் ட்ரில்லியன் என்று எண்ணிக்கையில் அடங்காத மீன்வகை, நண்டு வகை, முத்து வகை, பவழ வகை என்றெல்லாம் குறிப்பிடத் தெரிந்த சூழலியல் நிபுணர்கள் கடலின் கரையை மறந்து விட்டுவிடுகிறார்கள். கடற்கரை என்றால் நெடிய மணல் பரப்பு. இந்த மணல் பரப்பு இல்லையென்றால் கடல் ஏது?

கடற்கரையில் காணும் மணல் பரப்பு பற்றிய கவனம் பலருக்கு இருப்பதில்லை. இது வெறும் மண் மட்டுமல்ல; மாபெரும் மணல் நதி. பருவக்காற்று வீசும்போது கடல் அலைகளோடு பேரளவிலான மணலை கரை ஒதுக்கும். பின்னர் காற்று மாறும்போது மீண்டும் கடலுக்கு அடித்துச் செல்லப்படுகிறது.

இப்படிப்பட்ட வரவும் செலவுமாக நடைபெற்று இறுதியில் சேமிப்பான மணல் நதியே கடற்கரையாக உள்ளது. நதியில் நீரோட்டம் உள்ளதுபோல் கடற்கரையில் மணலோட்டம் உள்ளதால் இதை மணல் நதி என்று கடல் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

இலங்கைத் தீவின் பெரும்பகுதிக் கடற்கரைப் பகுதியை வடக்கு கிழக்கு கொண்டிருக்கிறது. அதில் பெருமளவுக்கு மணற்பாங்கான கரையே அதிகம். நமக்கு நேரமும் இருப்பதில்லை, அதன் அருமையும் தெரிவதில்லை. பல வசதி படைத்த நாடுகளில் இருந்து இந்த மணற்கரைகளுக்காகவே ஏராளம் பணத்தைச் செலவு செய்து வந்து போகிறவர்கள் அநேகம்.

பல இடங்களில் அகன்றும் சில இடங்களில் குறுகியும் காணப்படும் இந்த மாபெரும் மணல் நதி, வளர்ச்சித் திட்டங்களால் அழிந்து போவதுதான் முரண்நகை. ஒருபக்கம் கடலில் சங்கமிக்கும் நதிகள் நகரங்களின் கழிவுநீர்க் கால்வாய்களாக மாறி மணல் வளர்ச்சி தடையுறுகிறது. மறுபக்கம், துறைமுகங்களின் விரிவாக்கம் கடற்கரைகளுக்கு மணல் வரத்தைத் தடை செய்கிறது. கடற்கரையில் மணல் இல்லாவிட்டால் நிலத்தடி நீர் உவராகிறது.

துறைமுகம் நிறுவும்போது அலைகளை நிறுத்தும் கட்டுமானங்கள் நிறுவப்படுகின்றன. கடற்கரைக்கு வரவேண்டிய மணல் தடையுறுகிறது. கடலுக்குள் அணை கட்டும்போது மணல் தடுத்து நிறுத்தப்பட்டு நீர் மட்டுமே கரைக்கு வரும். கரைக்கு வரவேண்டிய மணல் கடலுக்குள் பின்வாங்குவதால் மணல் வரத்தும் குறைந்து கடற்கரை காணாமல் போகிறது.


இவ்வாறு கடலின் மணல் – மாபெரும் மணல் நதியாகிய கடற்கரை காணாமல் போனால் சுனாமியின் விபரீதங்கள் அதிகமாகும். புயல் சேதம் அதிகமாகும். எல்லாவற்றையும் விட கடலையும் கடற்கரையையும் நம்பி வாழும் மீனவர்களின் வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது. கடற்கரை இருக்காவிட்டால், உயிர்க்காற்றும் வீசாது.

வளர்ச்சி என்றால் இயற்கை வளமும் வாழ்நிலையும் பாதிப்புக்கு ஆளாகும் என்பது சரி என்று கொண்டாலும்கூட, அதற்கு ஒரு எல்லை உள்ளது. அளவும் உள்ளது. பரந்த கடற்கரை மணல் பரப்பும், நிறைந்த மீன் வளம் உள்ள கடல் பகுதியையும் அழிவுறச் செய்வது நியாயமில்லை. மாபெரும் மணல் நதியாகக் காட்சி தந்து, ஏழை–நடுத்தர மக்களின் இலவசப் பொழுதுபோக்கு மட்டுமல்ல, சுவாசிக்க உயிர்க் காற்றையும் வழங்கும் கொடையைக் கொள்ளை அடித்தால் சுனாமி வரும். கடல் கோபம் கொண்டு பொங்கும்.

கடற்கரைகளை கவனமுடன் பேணுவோம். – ஆசிரியர் –

# நாட்டை பொறுப்பேற்கும் சந்ததியாக மாணவர்களை வளர்க்க வேண்டும்

(கொழும்பு)



தாய்மொழியை சரியான முறையில் பயன்படுத்தாவிட்டால் நாட்டைச் சிறந்த முறையில் கட்டியெழுப்ப முடியாது தாய்மொழியை உரிய முறையில் பயன்படுத்தியவர்கள்தான் உலகிற்கு சிறந்த படைப்புகளையும், புத்தாக்கங்களையும் வழங்கியுள்ளார்கள் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலி மகிந்த வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது எதிர்கால சந்ததியினர் புத்தகப் பூச்சிகளாகவும் கணினிகளின் அடிமைகளாகவும் மாறுவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. மாறாக எமது பிள்ளைகளை கலை, கலாசார நடவடிக்கைகளிலும் விளையாட்டுத் துறையிலும், சமூக சேவைகளிலும் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் நாட்டைப் பொறுப்பெடுக்கவிருக்கும் எதிர்காலச் சந்ததியினர்.

அவர்களது சேவையை நாடு எதிர்பார்த்து இருக்கின்றது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். ஆகவே அவர்களை நற்பிரஜைகளாகக் கட்டியெழுப்ப வேண்டியது இன்றியமையாததாகும் என்றும் தெரிவித்தார்.

# அருங்காட்சியகங்களுக்கு பாதுகாப்பு வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

அருங்காட்சியகங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது குறித்து தேசிய மரபுரிமைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.கடந்த காலத்தில் பெரும்பாலான அருங்காட்சியகங்களில் தொல்பொருள் பெறுமதியுடைய பொருட்கள் திருடப்பட்டமை மற்றும் இடம்மாறியமை தொடர்பான சம்பவங்கள் பதிவானதாக அமைச்சின் செயலாளர் காந்தி விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

அருங்காட்சியகங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களிடம் துப்பாக்கி இல்லாததால் பொருட்களைத் திருடுகின்றவர்களை எதிர்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக பாதுகாப்புச் செயலாளருக்குத் தெளிவுபடுத்தியதை அடுத்து பொலிஸ்மா அதிபர் ஊடாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் 500 பேருக்கு இரட்டை குடியுரிமை அந்தஸ்து

(கொழும்பு)

500 இற்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட உள்ளதாக குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் சூளானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த ஓராண்டு காலமாக குறித்த விண்ணப்பங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இரட்டைக் குடியுரிமை தொடர்பில் அரசாங்கம் பல புதிய விதிகளை அறிவித்ததன் பின்னர் முதல் தடவையாக இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட உள்ளது.விண்ணப்பதாரிகளில் இலங்கையர்களும், வெளிநாட்டுப் பிரஜைகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் ஆயிரம் விண்ணப்பதாரிகளிலிருந்து இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இரட்டைக் குடியுரிமை வழங்குதல் தொடர்பான புதிய சட்ட யோசனைத்திட்டம் சட்ட மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடியோருக்கு குடியுரிமை வழங்குவதனை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்றுக் கொண்ட பலர் யுத்தத்தின் பின்னர் இலங்கையில் குடியுரிமை பெற்றுக் கொள்ள விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நாய் குறுக்காக பாய்ந்ததில் இளைஞனின் கண்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே நாய் பாய்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் சிக்கிய இளைஞர் ஒருவர் கண்கள் இரண்டும் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பண்டத்தரிப்பு பனிப்புலம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச்சேர்ந்த கு. கசகீசன் (வயது 22) என்பவரே கால்கள் பாதிக்கப்பட்ட. நிலையிலும், காலையடி தெற்கைச் சேர்ந்த சின்னையா தர்ஷன் (வயது - 22) என்பவர் கால் முறிந்த நிலையிலும் சங்கானை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கண்கள் பாதிக்கப்பட்ட நிலையில் கிசிச்சை பெற்றுவரும் கு.கசகீசன் கொழும்பு வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எஸ்)

# வேலணைப் பிரதேசத்தில் கடற்பாசி வளர்ப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேசத்துக்குட்பட்ட செட்டிபுலம் எனும் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கடற்பாசிவளர்ப்புத் திட்டம் மேலும் விருத்தி செய்வதற்கான ஆரம்ப நிகழ்வும், கரந்துரையாடலும் நேற்று முன்தினம் நடைபெற்றது. செட்டிபுலக் கிராமத்தின் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் வேலணைப் பிரதேச சபைத் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சி.சிவராசா, கடற்றொழில் பரிசோதக உத்தியோகத்தர் NARA நிறுவன அதிகாரிகள் NAODA உத்தியோகத்தர்கள் Micro company பணியாளர்கள், செட்டிபுல கடற்றொழிலாளர் சங்கத் தலைவர், அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதேச சபைத் தவிசாளர் கிராமத்தின் வளர்ச்சிக்காகவும் வேலையற்ற இளைஞருக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காகவும் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியாலும் மேற்படி நிறுவனத்தினால் செயற்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். (85)

## காரைநகர் மேற்கு வீதி புனரமைப்புப் பணி தாமதம்



(காரைநகர்)

காரைநகர் மேற்கு வீதி நடப்பு ஆண்டு ஆரம்பத்திலிருந்தே பாரிய குண்டும் குழியுமாக போக்குவரத்துக்கே பெரும் இடையூறாக இருந்து வந்த நிலையில் கடந்த யூலை மாதம் அவ்வீதியைத் தார்க் கலவை போட்டுத் திருத்துவதாக ஆரம்பித்த வேலை இன்று வரை முற்றுப் பெறாத நிலையில் உள்ளது.

பலுகாடு சந்தியில் இருந்து துறைமுகச் சந்தி வரை இன்றும் திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காட்சி தருவதோடு இவ் வீதிக்கான போக்குவரத்துச் சேவைகளும் சீர்குலைந்து வருகின்றது.

இது இவ்வாறு இருக்க தற்போது பெய்து வரும் பருவ மழையால் 'செப்பனிடப்பட்ட பகுதிகளும் மீண்டும், மீண்டும் குண்டும் குழியுமாக மாறிக்கொண்டு வருகிறது.

இப்பகுதியில் கல் நெரிக்கும் இயந்திரம் நிரந்தரமாக நிறுத்தப்பட்டிருந்தும் வேலை நடைபெறுவது மிக மிகக் குறைவு என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து வீதியைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (50)

# எஞ்சியோரை விரைவாகக் குடியமர்த்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றேன்



(வடமராட்சி)

மக்களை மீள்குடியேற்றுவதற்காக இதுவரை விடுவிக்கப்படாத பகுதிகளில் இருக்கும் கண்ணிவெடிகளை அகற்றி மிக விரைவில் மக்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கும்படி யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்கவை நான் கேட்டுள்ளேன். அதற்குச் செயல் வடிவம் கொடுப்பார்கள் என நான் நம்புகிறேன். இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

வளலாய் மற்றும் இடைக்காடு போன்ற இடத்தில் 21 வருடங்களுக்குப் பின் மக்களை மீள்குடியேற்றும் செயற்பாடு கடந்த 29ஆம் திகதி வளலாய் சித்திவிநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஒன்றரை வருடத்தில் 3 ஆயிரத்து 500 குடும்பங்களை மீள்குடியமர்த்தியுள்ளோம். அத்துடன் ஆயிரத்து 767 வீடுகள் இதுவரையில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நான் முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றியபோது இவ்வளவு தூரம் பொதுமக்களுக்காக கஷ்டப்படவில்லை. யாழ். மாவட்டத்திற்கு வந்த பின்னர் நான் மக்களுக்காக மிகவும் பாடுபடுகிறேன். ஒரு சில அரசியல்வாதிகள் எனது சேவைகளை விமர்சித்து வருகிறார்கள். இவை தவறான செயற்பாடாகும். இதுவரை வளலாய்ப் பிரதேசத்தில் ஜே/284 கிராம அலுவலர் பிரிவிலுள்ள 455 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 81 பேரும், இடைக்காடு ஜே/283 கிராம அலுவலர் பிரிவில் 116 குடும்பங்களைச் சேர்ந்த 448 பேரும் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி, கோப்பாய் பிரதேச செயலர் எம். பிரதீபன், 515 பிரிகேற் கொமாண்டர் பி.பி. ரன்தெனிய, 51 பிரதேச கொமாண்டர் விக்ரமரத்தின மற்றும் இராணுவத்தினர், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (116)

## விருது வழங்கல்

(பொலிகண்டி)

நாடளாவிய ரீதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேசிய மாநாடும் விருது வழங்கும் வைபவமும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்துமணிக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு மாகாண முதலமைச்சர்கள், ஆளுநர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உப தலைவர்கள் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர். (116)

## நாய்கள் கணக்கெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நாய்களைத் தவிர மாடு, ஆடு, பூனை போன்ற மிருகங்களும் கடிப்பதன் மூலமாக மனிதர்களுக்கு நீர் வெறுப்பு நோய் ஏற்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு கடந்த வருடம் பசுமாட்டினால் கடியுண்ட 14 பேரிற்கு நீர் வெறுப்பு நோய் ஏற்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சுத் தகவல் மேலும் தெரிவித்தது.

எனவே, நாய்கள் மட்டுமன்றி ஏனைய மிருகங்களினால் கடியுண்டவர்கள் அந்நோய்க்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தற்சமயம் நாட்டில் உள்ள நாய்களின் எண்ணிக்கை கணக்கிடப்படவிருப்பதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை கருத்தடை செய்யப்பட்ட நாய்களின் எண்ணிக்கையும் அவ்வாறு கணக்கிடப்படவுள்ளது.

இவ்வாறான நடவடிக்கையின் மூலமாக நாட்டில் இருந்து நீர்வெறுப்பு நோயை முற்றாக ஒழிக்க முடியுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# டெங்கு நோய்த் தாக்கத்தால் வவுனியாவில் 39 பேர் பாதிப்பு

**சுகாதார வைத்திய அதிகாரி ப. சத்தியலிங்கம்**

(வவுனியா)

வவுனியாவில் டெங்கு நோய் தாக்கததுக்குள்ளானவர்களாக இந்த ஆண்டு 45 போர் இனங் காணப்பட்டிருந்தனர். எனினும் அவர்களில் 39 பேரே டெங்கு தாக்கத்துக்கு உள்ளாகியிருந்தமை உறுதிசெய்யப்பட்டதாக வவுனியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

டெங்கினால் பாதிக்கப்பட்டவர்களில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 4 பேராகவும் ஏனைய 35 பேரும் வெளி மாவட்டங்களில் இருந்து வவுனியாவில் தங்கியிருந்தவர்கள் என்பதும் கண்டறியப்பட்டது. இவர்களில் இந்த ஆண்டு அதிகளவில் மார்ச் மற்றும் யூலை மாதங்களில் கூடுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். தற்போது யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. எனவே அயல் மாவட்டங்களில் டெங்கு நோயின் தாக்கம் காணப்படுகின்றமையால் வவுனியாவிற்கு இந்நோய் பரவாது தடுக்க வேண்டிய தேவை காணப படுகின்றது.

எனவே வவுனியா மாவட்டத்தினை 5 வலயங்களாக பிரித்து சுகாதார தொண்டர்கள், இராணுவம் பொலிஸ் ஆகியோரின் உதவியுடன் வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்கள் அடையாளங் காணப்படவேண்டும்.

அதன் மூலம் அடையாளம் காணப்பட்ட இடங்களை இல்லா தொழிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்ததுடன் 5 வலயங்களுக்கும் ஒவ்வொரு பொது சுகாதாரப் பரிசோதகர்களும் உள்ளடக்கியதாக குழு அமைக்கப்பட்டு நடவடிக்கையை முன்னெடுக்கப்பட வுள்ளதாகவும் தெரிவித்தார். (125)

# மாவிட்டபுரம் மக்கள் மழையினால் அவலம்

(மாவிட்டபுரம்)

நீண்ட காலமாக மீளக்குடியமர்த்தப்படாமல் இருந்து அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட ம்ாவிட்டபுரம் தெற்கு மக்கள் தற்போது பெய்த மழை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இப் பகுதி மக்களால் பெருங்காடாகக் காணப்பட்ட இப்பிரதேசத்தி லுள்ள மரங்கள் மற்றும் பற்றைகள் அழித்து வெளியாக்கப்பட்டன.

மழை காரணமாக இவ்வாறு அழிக்கப்பட்ட மரங்கள் பற்றைகள் மீண்டும் முளைத்துக் காணப்படுகின்றன. இப்பகுதிக்குச் செல்வதற்குப் பாதைகள் சீரின்மையால் சேறும் சகதியுமான பாதைகள் ஊடாக மக்கள் பயணிக்க வேண்டியுள்ளது. இந்த வகையில் அண்மையில் பெய்த மழை மீள்குடியமர்த்தப்பட்ட மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. (17)


# இருபது வருடங்களின் பின்னர் திருக்கார்த்திகைத் திருவிழா

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் திருக்கார்த்திகை திருவிழா எதிர்வரும் எட்டாம் திகதி வியாழக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளதாக ஆலய ஆதீன பேரரசு மஹாராஜஸ்ரீ து. ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

திருவிழா நிகழ்வுகள் அதிகாலை 4.30 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பமாகி ஷண்முக அர்ச்சனை, ஸ்னபனாபிஷேகம், மகேஸ்வர பூசை, சொர்கப்பனை எரித்தல் என இரவு 7.30 மணி வரை பல விஷேட நிகழ்வுகள் இடம்பெறும். இவ் ஆலயத் தில் சில காலங்களாக மாலை 5.00 மணியுடன் வழிபாடுகள் நிறைவு செய்யப்பட்டது. தற்போது இவ் ஆலயம் அமைந்துள்ள அதனை சூழவுள்ள பிரதேசங்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டதை அடுத்து சுமார் இருபது வருடங்களின் பின்னர் அதிகாலை முதல் இரவு வரை வழிபாடுகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (54)







சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தில் நடைபெற்ற மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் திருமதி தி. குமுதரஞ்சன், மாற்று வலுவுள்ளோருக்கு தொழில் வாய்ப்பினை வழங்கிய நிறுவன உரிமையாளருக்கு கேடயம் வழங்குவதையும், கைதடி கிழக்கைச் சேர்ந்த 35 வயதுப் பெண்மணிக்கு மேற்படி நிறுவனத்தினால் பிரத்தியேகமாக செய்து வழங்கப்பட்ட வண்டியுடன் பெண்மணி இருப்பதையும், முச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்ட ஏனைய பயனாளிகளையும் காணலாம். (137)

# பெண்கள் மீதான வன்முறையை ஒழிக்க —கிளிநொச்சியில் "அக்கினி வதம்"—

(வவுனியா)

பெண்களுக்கு எதிரான வன்முறையினை ஒழிக்கும் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் மனித உரிமைகள் இல்லத்தினால் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்போம் என்ற தொனிபொருளில் 'அக்கினி வதம்' நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இளைஞர் சேவைகள் மன்றத்தின் வட மாகாண பணிப்பாளர் திருமதி எஸ். விமலேஸ்வரி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் இந்நிகழ்வில் கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த பெண்கள் அமைப்புக்கள் மற்றும் கலாசார அமைப்புக்கள் உட்பட கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையாற்றுகையில்,

பெண்கள் தற்துணிவுடன் செயலாற்றவேண்டிய தேவையுள்ளது. வன்முறைளைக் கணடு அஞ்சுபவர்களாக இருந்து விட முடியாது. பெண்கள் மென்மையானவர்கள் என்ற காரணத்தை காட்டி பெண்கள் மீது நடக்கும் வன்முறைகளை பார்த்துக் கொண்டு இருப்போமேயானால் எமது கலாசாரம், பண்பாடு என்பன அழிந்து விடும். நாம் சம உரிமையுடன் வாழ வேண்டியவர்கள். உரிமையை அனுபவிப்பதற்கு பின்னிற்க முடியாது. எனவே இன்றைய நாளில் பெண்கள் பெண்களது பலத்தினை மீட்டுப் பார்க்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெண்கள் தமது மனதில் உள்ள பெண்களுக்கு எதிரான வன்முறைச் செயற்பாடுகளை ஓவியங்களாகவும், எழுத்துக்களாகவும் துணிகளில் எழுதியதுடன் பெண்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்துமாறு கோரி வெள்ளைத்துணியால் வாயைக் கட்டியவண்ணம் பதாதைகள் ஏந்தியிருந்ததுடன் அக்கினியில் தமது வாய்களை கட்டியிருந்த துணிகளை வீசியெறிந்து வன்முறைக்கெதிராக குரல் கொடுப்போம் என சபதம் எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்வுகளுக்கு மனித உரிமைகள் இல்லத்தின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவி எஸ். வஜயராணி, கனகபுரம் மகாவித்தியாலயத்தின் அதிபர், கருணை இல்லத்தின் அருட்சகோதரர் பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (125)

## பரிசளிப்பு விழா

(பூநகரி)

பூநகரி மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்வுகளும் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசாவும், சிறப்பு விருந் தினர்களாக கிளி. வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி கணேச லிங்கமும், பூநகரிக் கோட்டக் கலவி அலுவலர் சு.தர்மரத்தினமும கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

# சிறைச்சாலைக் கைதிகளுக்கு எயிட்ஸ் நோய் விழிப்புணர்வு



(யாழ்ப்பாணம்)

எயிட்ஸ் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் கருத்தரங்கு இடம்பெற்றது.

யாழ். சிறைச்சாலை பிரதம அதிகாரி ந.பிரபாகர் தலைமையில் நேற்று முன்தினம் காலை 11.00 மணிக்கு நடைபெற்ற கருத்தரங்கில் யாழ். போதனா வைத்தியசாலை பால்நிலை தொற்றுநோய் வைத்திய நிபுணர் சி.கணேசலிங்கம் கைதிகளுக்கு எயிட்ஸ் தொற்று நோய் தொடர்பான கருத்துக்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை பால்நிலை தொற்றுநோய் வைத்திய நிபுணர் சி.கணேசலிங்கம், யாழ். சுகாதாரப் பணிமனை இணைப்பாளர் எஸ் தவக்குமார், யாழ்.சிறைச்சாலை பிரதம அதிகாரி ந.பிரபாகர், யாழ். சிறைச்சாலை ஊடக இணைப்பாளர் சுசிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எஸ்)




முப்பது வருடத் தேக்க நிலைக்குப் பின்பாக இப்பதான் யாழ்ப்பாணப் பகுதிகளில் புதிய, புதிய கட்டடங்களும், வர்த்தக நிறுவனங்களும் தோன்றியுள்ளன.

அதற்கு முன்பாக இந்த மாதிரி சந்து பொந்துகளெல்லாம் இருந்த கடைகளையே திறக்க வியாபாரம் இல்லாமல் மூடிக்கிடந்தன.

இப்பொழுது தென்பகுதி சுற்றுலாப் பிரயாணிகள் என்றில்லாமல் இங்கே மேற்கொள்ளப்படுகின்ற கட்டடப் பணிகள் மற்றும் வீதி விசாலிப்புப்பணிகள், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, ரயில் பாதை அமைப்புகள் போன்ற வேலைத் தளங்களில் பணிபுரிய வந்துள்ள பணியாட்கள் என்பவற்றாலும் சனநெருக்கடி அதிகரித்துள்ளது.

கடந்த வருடங்களில் படையெடுத்த சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையால், இங்கு சும்மா வெவ்வால் குடிகொண்டிருந்த வீடுகள் எல்லாம் தங்குமிடங்களாக மாறினதால், வீட்டுக்காரர்கள் புதிதாகப் பெருந்தொகைப் பணத்தைக் கண்டனர்.

இதனை அடுத்து யாழ்ப்பாணத்தில் வீடொன்றையோ, கடை ஒன்றையோ வாடகைக்குப் பெறுவதென்றால் லட்சக் கணக்கில் முற்பணமும், ஆயிரக்கணக்கில் வாடகைகளும் செலுத்த வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது.

கொழும்பு, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை மற்றும் இவைபோன்ற பிரதேசங்களில் சாதாரணமாக சிறுதொகைப் பணத்தில் வீடோ, கடைகளோ எடுத்துவிடலாம். யாழ்ப்பாணத்தில் இன்றைய நிலையில் கஸ்டம்தான்.

புதிதாக என்றில்லாமல் பல வருடங்களாக வாடகைக்கு வைத்திருபபவர்களிடம் இருந்தும் கூடிய வாடகை, முற்பணம் என்பது கோரப்படுவதுடன் இல்லையானால் இடங்களைக் காலி செய்யும் நிலையே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

எனக்குத் தெரிந்த ஒருவர் பத்தடி அகலமும், பதினைந்தடி நீளமும் கொண்ட கடை ஒன்றில் சிகை ஒப்பனை நிலையம் வைத்துள்ளார்.

கடை எடுக்கும்போது 10 ஆயிரம் ரூபா முன்பணமும் வாடகை 1500 ரூபாவுமாக எடுத்துக் கொண்டவர், இப்பொழுது 3 ஆயிரம் ரூபா வாடகை கட்டி வருகிறார். திரும்பவும் முற்பணத்துக்கு 40 ஆயிரம் ரூபா செலுத்தி 50 ஆயிரமாக்கவும் மாத வாடகை மூவாயிரத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாவாக வும் அதிகரித்துக் கேட்டிருப்பதாகவும் கூறுகிறார்.

இவ்விதம் யாழ். நகரம், புறநகர்ப் பகுதிகளிலும் வர்த்தக நிறுவனங்கள், வாடகை வீடுகள் எடுத்திருப்போர் பெரிதும் பாதிக்கப்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கின்றன.

இதற்கெல்லாம் வாடகை நிர்ணய சபை உதவ முடியாதா?

அரசால் சகல தொழில்களுக்கும், அபிவிருத்தி வேலைகளுக்கும் நூற்றுக் கணக்கான அமைச்சுகள் நிறுவப்பட்டு இருந்தபோதும், இன்னமும் பல வேலைத்திட்டங்கள் தூங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. உதாரணத்திற்கு சாய்ப்புச் சட்டத்தை எடுத்துக்கொள்ளலாமல்லவா? இன்றும் எட்டு மணிநேரம் வேலை கொள்ளல் அல்ல, பன்னிரெண்டு மணிநேர கடமைகூட நடைமுறையில் இல்லை. அதற்கும் மேல... வாடகை நிர்ணய சபையின் தூக்கம் கலைவது எப்போது?

# வடமாகாணத்தில் அழகன், அழகிப் போட்டிகள் வெற்றியாளருக்கு தலா ஒரு இலட்சம் பரிசு

(முழங்காவில்)

வடமாகாண அளுநர் செயலகத்தால் Miss வடமாகாணம், Mr வடமாகாணம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன. 17-35 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலா ரும் இப்போட்டியில் பங்குபற்ற முடியும். இப் போட்டியில் வெற்றியாளராக வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளது. இப்போட்டியில் அழகான உடல் அமைப்பு, ஆளுமை, அகத்தின் அழகு இம் மூன்று அம் சங்களின் அடிப்படையில் வெற்றியாளர்கள் தீர் மானிக்கப்படவுள்ளார்கள்.

இதற்குரிய விண்ணப்பப்படிவங்களை ஒவ வொரு கலாசாரப் பிரிவிலும் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (112)

## திருமுறை முற்றோதல்

(வவுனியா)

வவுனியா வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்தில் கடந்த 19 தினங்களாக நடைபெற்று வந்த பன்னிரு திருமுறை முற்றோதலின் பூர்த்தி நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆலயத்தில் நடைபெற்றது.

ஆலயத்தில் மாலை பூசையைத் தொடர்ந்து இடம்பெற்ற இந்த நிகழ்வில், தமிழருவி த. சிவகுமாரன் சிறப்புச் சொற்பொழிவையாற்றிருந்ததுடன் வவுனியா பிரதேச செயலாளரின் விசேட உரையும் இடம்பெற்றிருந்தது.

இதனைத் தொடர்ந்து திருமுறை முற்றோதலை நிகழ்த்திய இறைபணிச் செம்மல் வை.செ.தேவராஜா, எஸ்.பரஞ்சோதி ஆகியோருக்கான பாராட்டும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் உட்பட பலர் கலந்து சிறப்பித்திருந்தனர். (125)

## ஊழியர்களின் பிள்ளைகளுக்கு உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ரெலிக்கொம்மின் (SLT) யாழ்ப்பாணக் கிளை ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தத் திட்டமானது சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் முதலாவது செயற்றிட்டம் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் மனிதவள முகாமைத்துவ பிரிவு பிரதம நிறைவேற்று அதிகாரி ரங்சித் ரூபசிங்க, சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வடகிழக்கு முகாமையாளர் ஏ.கிருபாகரன், சிறிலங்கா ரெலிக்கொம் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவானந்தன் மற்றும் சிறிலங்கா ரெலிக்கொம் யாழ். பிராந்திய ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

05.12.2011 – திங்கட்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 19 ஆம் நாள்.
இராகுகாலம் 7.46-9.16, சுபநேரம் 12.16 -1.16 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி காலை 7.45 வரை
திதி: தசமி மு.ப 11.22 வரை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணம் வரும், இனசன அழைப்பு. குடும்பத்தில் குதூகலம், உடம்பு நற்சுகம், தெரு விபத்து வரலாம்.

**ரிஷபம:–** காரியத்தடை, காசுக்கஷ்டம், அற்பர் நேசம், சுற்றத்தார் ஆதரவு. தேகம் சுகம்.

**மிதுனம் :–** பணம் வரும், குடும்பத்தில் கவலை, வெளிநாட்டு உதவி, மனதில் சஞ்சலம், தேகம் பலவீனம்.

**கடகம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், நண்பர் உதவி, சுற்றத்தார் ஆதரவு, அதிகாரிகள் சினம்.

**சிம்மம்:–** பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், உறவினர் உதவி, அதிகாரப் போட்டி, தொழில் வெற்றி.

**கனனி :–** தொழில் ஆதாயம், பணம் வரும், காரியத் தடை, வெளிநாட்டு உதவி, உடம்பு பலவீனம்.

**துலாம் :–** பணம் வரும், தொழிலில் ஆதாயம், அதிர்ஷ்ட நாள், மாமனார் பகை, அநீதியிழைத்தல், தேகம் சுகம்.

**விருச்சிகம்:–** மாமியார் வரவு, பணம் வரும், அற்பர் நேசம், குடும்பத்தில் மகிழ்ச்சி, உற்சாகம்.

**தனுசு:–** பணம் வரும், உறவினர் வரவு, அதிகாரப் போட்டி, வீண்அலைச்சல், தேசம் சுகம்.

**மகரம:–** சகோதர உதவி, பணம் வரும், நினைத்ததைச் சாதித்தல், பிணக்குத் தீர்தல், தேகம் பலவீனம்.

**கும்பம் :–** பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், நண்பர் வருகை, வெளிநாட்டு உதவி, தேகம் நற்சுகம்.

**மீனம் :–** சுற்றத்தார் ஆதரவு, பணம் வரும், அதிகாரப் போட்டி, தெரு விபத்து வரக்கூடும், தேகம் சுகம்.

# பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் முதல் பலி பிரபாகரன்!



**செ**ப்டம்பர் 11 தாக்குதலானது அது வரையான உலக ஒழுங்கையே மாற்றியமைத்தது. அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்பட்ட [War on Terror] பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் தான், இந்த மாற்றத்தின் அடிப்படையாக இருக்கிறது.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் பிறந்த பின்னணியையும் நாம் பார்க்க வேண்டியது அவசியம்.

செப்டம்பர் தாக்குதல் இடம்பெற்று விட்டது. அடுத்து என்ன செய்வது, எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்ற கேள்விகள் அமெரிக்க மூளைசாலிகளை ஆட்கொள்கின்றன. பலரும் பலவிதமான ஆலோசனைகளை முன்வைக்கின்றனர்.

உடனடியாக ஆப்கானிஸ்தானை தாக்கியழிக்க வேண்டும் என்கின்றனர் சிலர். இன்னும் சிலரோ, எங்களது எதிரிகள் என்போரை இனியும் விட்டுவைக்கக் கூடாது என்கின்றனர். இதற்காக பாகிஸ்தானின் ஒத்துழைப்பை கோர வேண்டும். ஒத்துழைக்க மறுத்தால் அதற்கும் பாடமொன்று புகட்ட வேண்டும்.

இப்படி பலரும் பலவிதமான பரிந்துரைகளைச் செய்து கொண்டிருந்த போது ஒருவர் மட்டும் சற்று மாறுபட்ட வகையில் War on Terror என்ற வசனத்தை உச்சரிக்கின்றார் அவர் கோலின் பவல் - அமெரிக்காவின் வெளிவகாரச் செயலாளர் அத்துடன் அமெரிக்க அதிபர் புஷ்சின் மூளையென வர்ணிக்கப்பட்டவர்.

அவரது வாதம் வேறு விதமாக அமைந்திருந்தது நாங்கள் இப்போது ஆப்கானிஸ்தான் மீது உடனடியாக தாக்குதல் தொடுக்கும் திட்டத்தை அறிவித்தால், அது இஸ்லாமிய நாடுகள் மத்தியில் எதிர்ப்புணர்வை அதிகரிக்கும். எனவே நாம் இதனை உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமாக அறிவிப்போம். அவ்வாறு செய்வோமானால் உலகத்தின் ஆதரவை நாம் பெற முடியும். அதேநேரம் எதிரிகளை இலக்கு வைப்பதும் சுலபமாகும் என்றவாறு, கோலின்பவல் தனது திட்டத்திற்கான நியாயங்களைச் சொல்லுகின்றார். இறுதியில் அவரது திட்டமே ஏற்றுக் கொள்ளப் படுகின்றது.

உண்மையில் இது பரந்ததொரு நிகழ்சித்திட்டத்தை உள்ளடக்கியிருந்தது.


ஆனால் இந்த நிகழ்ச்சிநிரலில் இலக்கு வைக்கப்பட்ட அமைப்புக்களின் அனேகமானவை இஸ்லாமிய அமைப்புக்கள் என்பதில் உண்மை இருக்கிறது. ஆனால் இந்த பயங்கரவாததிற்கு எதிரான யுத்தத்தின் முதல் பலி இஸ்லாமிய அமைப்போ அல்லது இஸ்லாமியத் தலைவரோ அல்ல.

இதன் முதலாவது பலி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்தான். பிரபாகரன் பின்லேடனல்ல, தவிர பிரபாகரன் அமெரிக்க நிகழ்ச்சிநிரலுக்கு எதிரான ஒருவருமல்ல. ஆனாலும் அது பிரபாரகனையும் உலக அரசியல் அரங்கிலிருந்து பிடுங்கியெறிந்தது. அன்றைய சூழலில் இருந்த வெற்றிகரமான [Anti-State Orgnaizations] அரச எதிர்பு அமைப்புக்கள் இரண்டு ஒன்று விடுதலைப்புலிகள் மற்றையது கொலம்பிய விடுதலை இயக்கம் [FARC].

உண்மையில் அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்படும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் - உலகெங்கும் இயங்கிய ஆயுத விடுதலை அமைப்புக்களை இலகுவாக துடைத்தழிப்பதற்கானதொரு வாய்ப்பை வழங்கியது என்பதே உண்மை. அதில் முதலில் அகப்பட்டுக் கொண்டவர்தான் பிரபாகரன்.

இந்த பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் 2009 இல் பிரபாகரனின் கதையை முடித்து வைத்தது. 2011 மே மாதத்தில் பின்லேடனின் கதையையும் நவம்பர் மாதத்தில் கொலம்பிய விடுதலை இயக்கத்தின் தலைவர் அல்போன்சின் கதையையும் முடித்து வைத்தது.

*- யதீந்திரா கட்டுரையிலிருந்து*




# கிணறுகள் வட்டவடிவில் இருப்பது ஏன்

**கி**ணறுகள் எங்கு இருந்தாலும் அவை வட்ட வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கும். கிணறுகள் தோண்டியவுடன் அவற்றின் நான்கு பக்கத்திலும் வடிவம் கலையாமல் இருக்கச் செய்வது கிணறறைச் சுற்றிலும் வட்டவடிவில் உள்ள மண் மற்றும் கல்லின் எடைதான். கிணற்றை வட்ட வடிவில் அமைக்கும் போது மட்டுமே அதன் திறன் அதிகரிக்கிறது.

பொதுவாக “ஆர்ச்” வடிவ வளைவிற்கு அதிகளவில் எடை தாங்கும் திறன் உண்டு. அதனால் தான் அந்த காலத்தில் கட்டடங்கள், மண்டபங்கள், பாலங்கள் என்று எல்லா இடங்களிலும் அவை, “ஆர்ச்” வடிவ வளைவுகளுடன் அமைக்கப்பட்டிருக்கும். இரண்டு அரை வட்ட ஆர்ச்சுகள் சேர்த்து வட்ட வடிவை உருவாக்குகின்றன.

# மேர்வினின் “வீரம்”

**ப**ல மனைவிகளை வைத்திருப்பதே அரசர்களுக்குப் பெருமை. அதுவே அவர்களுக்கு கௌரவம். எனக்கும் பல மனைவியர் இருக்கின்றனர். எனது திறமையை நான் நிருபித்துள்ளேன். என்னைப்போலவே தயாசிறி எம்.பி யும் நிருபித்துள்ளார் என்பதுடன் சேவலின் வேலை கொத்துவதாகவும் அது எங்கு கொத்தினாலும் கொத்தியதுதான் என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருக்கிறார்.




பாராளுமன்றத்தில் வெள்ளிக் கிழமை நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


‘அரசர்களுக்கு பல மனைவிமார் இருப்பதே அவர்களுக்குப் பெருமை. எனினும் நான் இரத்தினபுரிக்கு அடிக்கொரு தடவை சென்று வருவதாக இங்கு தெரிவிக்கின்றனர். எனது உறவினர் வீட்டில் இடம்பெற்ற வைபவத்துக்கே நான் சென்றிருந்தேன். அதில் தவறில்லை.

நான் மனிதர்களை சம்பாதித்துள்ளேன். அவர்களின் வீடுகளுக்குச் செல்ல வேண்டும். விஜயன், எல்லாளன், குவேனி வரலாற்றுக் கதைகளில் கூறப்படுவதைப் போல் இவர்கள் தாம் செல்கின்ற வேளையில் தமக்குப் பின்னால் ஒரு பட்டாளத்துடனேயே செல்வர். அன்று தயாசிறி எம்.பி இருந்திருந்தால் விஜயன், எல்லாளன், குவேனி போன்றோரை தனியாகச் செல்லுமாறே ஆலோசனை வழங்கியிருப்பார். அது புதுமையான ஆலோசனை. எனினும் இவர் பலருடன் சென்றிருப்பார்.

அரசர்களுக்கு ஐந்தாறு மனைவியரும் அந்தப்புரமும் இருக்குமாயின் எனக்கு ஏன் ஐந்தாறு மனைவியர் இருக்கக் கூடாது? அதற்கான தகுதி எனக்கிருக்கிறது. எனது திறமையை நான் காண்பித்திருக்கிறேன். எதிர்காலத்திலும் காண்பிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். என்னைப்போலவே தயாசிறி எம்.பியும் தனது திறமையை வீட்டுக்குள்ளும், கிராமத்திலும், மாகாணத்திலும் ஏன் நாடளாவிய ரீதியிலும் காண்பித்திருக்கிறார்.

**கி**யூபா நாட்டில் உள்ள “பீ ஹம்மிங்” என்ற பறவையின் ஆண் இனம் தான் உலகிலேயே மிகச் சிறிய பறவை. பெண் இனம், கால் அங்குலம் அதிகமாக உள்ளன. இதன் எடை இரண்டு கிராம். மூக்கில் இருந்து வால் வரை இரண்டு அங்குலம் அளவே உள்ளது.






# உலகில் மிகச் சிறிய பறவை

இது பறக்கும் போது “விர்” ரென்று ஒரு வினாடிக்கு 80 தடவை சிறகடிக்கும். அதனால் இதன் இறகுகளின் அசைவை நம்மால் பார்க்க முடியாது. இது சிலந்திகளையும், ஈக்களையும் சாப்பிடும். இதனுடைய விருப்பமான உணவு பூவில் உள்ள தேன்தான்.

# மூன்று நாவலாசிரியர்கள்



உலக அரங்கில் மூன்று பேர் முக்கியமான நாவலாசிரியர்களாக கொண்டாடப்படுகிறார்கள். ஒருவர் ஓரான் பாமுக், நோபல் பரிசு பெற்றுள்ள துருக்கியை சேர்ந்த எழுத்தாளர். இவரது My Name is Red, என்ற நாவல் என் பெயர் சிவப்பு எனத் தமிழில் வெளியாகி உள்ளது. நுண்ணோவிய மரபைக் களமாக கொண்டு எழுதப்பட்ட இநத நாவல் ஆயிரத்தொரு அராபிய இரவுகளைப் போன்ற கதை சொல்லும் முறையைக் கொண்டது.



மற்றவர் கார்லோஸ் ருயுஸ் ஜெபான், இவரது The Shadow of the Wind நாவல் 2001 ஆம் ஆண்டு வெளியானது, மறக்கப்பட்ட புத்தகங்களுக்கென ஒரு கல்லறைத்தோட்டம் இருக்கிறது என்றும் அங்கே அனைவராலும் கைவிடப்பட்ட புத்தகங்கள் தங்களை எவராவது நேசிக்கமாட்டார்களா எனக் காத திருப்பதாகவும், அப்படியான ஒரு கல்லறை நூலகத்திற்குப் போய் புத்தகம் ஒன்றைத் தேர்வு செய்கின்றவன் அந்தப் புத்தகத்திற்கு விசுவாசமான ஆளாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளதாகவும் கதை நீண்டு செல்கிறது. புறக்கணிக்கப்பட்ட புத்தகங்களின் குரலாக ஒலிக்கும் இந்த நாவல் உலகை புத்தகங்களே மேம்படுத்துகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

மூன்றாவது நாவலாசிரியர் கனடாவைச் சேர்ந்த யான் மார்டில். இவரது Life of Pi நாவல் பாண்டிச்சேரியை பின்புலமாகக்கொண்டு எழுதப்பட்டது. விலங்குகளை ஏற்றிக் கொண்டு போகும் ஒரு கப்பலில் நடைபெறும் சம்பவங்களே கதையின் பிரதான களம். இவரது சமீபத்திய நாவலான Beatrice and Virgil.. தொன்மத்தையும் சமகாலத்தையும் ஒன்றிணைத்து உருவாக்கபட்ட பகடி வகை எழுத்து. இந்த மூவருமே இன்று அதிகம் பேசப்படும் நாவலாசிரியர்களாகும்.



சர்வதேச இலக்கிய அரங்கில் எடுவர்டோ கலியானோவின் (Eduardo Galeano) கட்டுரைகளுக்கு முக்கியமான இடமிருக்கிறது. இவர் வரலாற்றையும், இலக் கியத்தையும் லதத்தீன் அமெரிக்க அரசியலையும் பற்றி அதிகம் எழுதியவர். இந்தியாவைப் பற்றி அதிகம் எழுதியிருப்பவர் என்பது கூடுதல் செய்தி.

இவரைப் போலவே வில்லியம் டேல்ரிம்பிள் (William Dalrymple) வரலாற்றையும் பயணத்தையும் பற்றி கட்டுரைநூல்களை எழுதும் தனித்துவமான எழுத்தாளர். கடைசி மொகலாய அரசரான பகதூர் ஷா பற்றிய The Last Mughal, The Fall of a Dynasty, Delhi 1857 நூல் விரிவான ஆய்வின் அடிப்படையில் எழுதப்பட்ட ஒன்று, தஞ்சை பெரிய கோவில் வரலாறு உள்ளிட்ட பல முக்கிய கட்டுரைகளை எழுதிய இவர் சில காலம் டெல்லியில் வசித்தவர்.

சமீபத்தில் என்னை உலுக்கிய புத்தகம் அருண் ஷோரி எழுதிய Does He Know A Mother's Heart. அரசியல்வாதி, பத்திரிகையாளர், முன்னாள் மத்திய அமைச்சர் என்று பன்முகம் கொண்டுள்ள அருண்ஷோரியின் இப் புத்தகம் அவரது மனவளர்ச்சி குன்றிய மகனைப் பற்றியது. அவனது பிறப்பில் துவங்கி இன்றுவரை அவனுக்காக அருண்ஷோரியும் அவரது குடும்பமும் எவ்வளவு வலிகளை தாங்கிக் கொண்டார்கள். அந்த சிறுவனை எப்படி பாசமாக வளர்த்து வருகிறார்கள் என் பதைப் பற்றி மிகவும் உணர்ச்சி பூர்வமாக எழுதியிருக்கிறார்.

மனவளர்ச்சி குன்றிய குழந்தை தனக்கான தனியுலகில் வாழ்கிறது. அதன் மீது பரிவு கொள்ளவும், பாசம் காட்டவும் பெற்றவர்கள் எவ்வளவு பாடுபட வேண்டியிருக்கிறது.

சமூகம் அந்தப் பெற்றோர்களை எந்த அளவு பரிகாசம் செய்கிறது என்பதை கண்ணீர் வர எழுதியிருக்கிறார். உண்மை சுடும் என்பார்கள், அதற்கு இதுவே ஒரு சிறந்த உதாரணம்.

*- எஸ். ராமகிருஷ்ணன்*

# நில்... கவனி.. நிதானமாய் திருமணம் செய்.



**கா**தலிப்பவர்கள் அனேக சந்தர்பங்களில் சிறுவயதில் திருமணங்களை செய்து கொள்கின்றனர். யாழ்ப்பாணத்திலும் இவ்வாறான இளவயது திருமணங்கள் பற்றி அதிகமாக பேசப்படுகின்றது. காதலிப்பவர்கள் காதலைச் சொல்லி, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, தங்களது வருங்காலததைப் பற்றி சரியாக திட்டமிட்டு, வீட்டில் பெரியவர்களின் அனுமதியோடு நடக்கும் திருமணங்களை விட, அவசர அவசரமாக தங்களது திருமணங்களை நடத்திக் கொள்ளும் காதலர்கள். பல்வேறு பிரச்சினைகளைச் எதிர் கொள்கின்றனர் என்பது அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. காதலர்கள் தங்களது காதலைச் சொல்ல வேண்டுமானால் அவசரம் காட்டலாம். அதில் தவறில்லை. ஆனால் கல்யாணம் செய்துகொள்ள அவசரப்படக்கூடாது. நிதானமாக தங்களது நிலைகளை ஒருவருக்கொருவர் புரிய வைக்கவேண்டும். தங்களது வருங்காலத்தைப் பற்றித் தெளிவாக பேசி ஒருமித்தக் கருத்தை கொண்டு வரவேண்டும்.

வீட்டில் பெரியவர்களிடம் உங்களது காதலைப் பற்றி சொல்லி அவர்களிடம் அனுமதி பெற முயற்சிக்க வேண்டும். சில காலம் பொறுத்திருந்து அவர்களது மனதில் இடம்பிடிக்கவும், உங்களது காதல் மீதான உறுதியை காட்டவும் அவகாசம் அளிக்க வேண்டும். பிறகும் அவர்களது எதிர்ப்பு அதிகரித்தால், அப்போது வீட்டை விட்டு வெளியேறுவதோ, சுயமாக திருமண்ம் செய்துகொள்வதோ தவறில்லை. ஆனால், வீட்டில் ஏதாவது ஒரு பிரச்சினை ஏற்படும் பொழுது அதிலிருந்து தப்பிப்பதற்காக சரியான திட்டமிடல் இல்லாமல் வீட்டை விட்டு ஓடிப்போய் திருமணம் முடித்துக்கொள்வது தவறான முடிவாகும். இதனால் காதலர்கள் இருவருமே வேலை வாய்ப்பு, கல்வி போன்றவற்றை திட்டமிட்டபடி அடைய முடியாமல் கிடைத்ததைக் கொண்டு வாழ வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகிறார்கள். ஓரளவிற்கு வசதியான குடும்பத்தில் இருந்து வந்த ஆணோ, பெண்ணோ, திடீரென தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களை திருமணமான புதிதில் வேண்டுமானால் தாக்குப்பிடிக்கப் பார்ப்பார்கள். ஆனால் அதையே வாழ்நாள் முழுவதும் சகித்துக் கொள்ள முடியாதவர்களாக ஒரு காலக்கட்டத்தில் திருமணத்தையே வெறுப்பார்கள். அடுத்ததாக தாம் விரும்பி ஏற்றுக்கொண்ட தனது வாழ்க்கைத் துணையின் மீது தங்களது கோபம் திரும்பும். மேலும், அவசரக் திருமணத்தால் இருவருமே தங்களது பெற்றோர், உறவினர்களின் ஆதரவினை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் மனத்தில் தங்களுக்கு யாருமில்லை என்ற பயத்தை ஏற்படுத்தியிருக்கும்.

ஒருவேளை இருவரும் நல்ல முறையில் காதலித்து திருமணம் செய்து கொண்டிருக்கும் பட்சத்தில் சுக துக்கங்களை பகிர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். ஆனால் ஒருவர், வெறும் காமத்திற்காகவோ, பணம் அல்லது வேறு ஒரு தேவைக்காக ஏமாற்றி திருமணம் செய்து கொள்ளும் பட்சத்தில், அந்த பெண்ணின் அல்லது ஆணின் நிலை என்னவாக இருக்கும். நம்பி வந்த இடமும் மோசம் போய், பெற்றவர்களும் நம்மை மீண்டும் சேர்த்துக் கொள்ளாத நிலையில் அனாதை நிலைக்கு அல்லவா தள்ளப்படுவார்கள். எனவே, யாராக இருந்தாலும், காதலை நல்ல முறையில் கொண்டு செல்ல தெளிவான சிந்தனையும், முடிவும் அவசியம். அவசரத் திருமணம் அவஸ்தையில் முடியலாம். எச்சரிக்கை உணர்வோடு செயற்படுங்கள்.




## தனுசு ராசி



மூலம் பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்
பெயர் முதல் எழுத்துக்கள் :- யே, யோ, யு, பீ, பூ, த.பீ,டா,பே.

அளவான உயரமும், அதிகார தோரணை, தூய்மையான தோற்றம், தெளிவான மனோ நிலையும் உடையவர்கள். இவர்களின் நடை, உடை பாவனைகள் மற்றவர்களிடம் இருந்து இவர்கள் நடை, உடையை வித்தியாசப்படுத்துவதாகவே அமையப் பெற்றவர்கள். நிதானமாக செயற்பட்டு பிறரின் ஆலோசனைகளையும் ஏற்று சகல காரியங்களையும் சாதிக்கக் கூடியவர்கள். தவறான பாதையில் செல்ல மனம் இல்லாதவர்களாகவும், மனதில் ஓரளவு ஒளிவு மறைவு, சூதுவாது இல்லாதவர்களாகவும் இருப்பார்கள். உல்லாசங்களிலும், கேளிக்கைகள் பொழுது போக்குவதிலும் ஓய்வெடுப்பதிலும் அதிகளவு ஈடுபாடு உடையவர்கள். எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பவர்கள். தகுதி குறைவுடைய நண்பர்களையும் தரக் குறைவுடைய பொருட்களையும் விரும்பாதவர்கள். எதிலும் அதிக ஆர்வம் உடையவர்கள். பெரிய திட்டங்களையும் உயர்ந்த எண்ணங்களையும், கொள்கைகளையும் உடையவர்கள். தயக்கமும், கூச்ச சுபாவமும் அதிகமாகவே கொண்டவர்கள். சிக்கன மனப்பான்மையை கொண்டவர்கள். அளவான குடும்ப அமைப்பையும், அதிகளவில் தவிர்க்க முடியாத குடும்பச் செலவுகளையும் உடைய இவர்கள் அழகுடைய, பண்புள்ள வசதி பொருந்திய மனைவியைப் பெறுவார்கள். மனைவியால் யோகப் பலன்களைப் பெறுவார்கள். அதிர்ஷ்டம் உடைய புத்திர பாக்கியம் உடையவர்கள். இப்படிப்பட்ட உங்களுக்கு 2012 புத்தாண்டின் பலன்களைப் பற்றி இனிப் பார்ப்போம்.

ஆண்டு கிரகங்களான குரு, கேது, ராகு சனி அடுத்தடுத்து சாதகமாகச் செயற்படுவதால் இவ்வாண்டில் நற்பலன் யாவும் பெருகி வரும். தொழில் வளம் மேல் ஓங்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியை ஏற்படுத்தும். நண்பர்கள் வகையில் நல்ல அன்பும், ஆதரவும் கிடைக்கப் பெறுவீர்கள். உறவினர்கள் வருகையால் பல நன்மைகள் ஏற்படக்கூடும். வாகன வசதி திருப்திகரமாக இருக்கும். திடீர் தன வரவுகள் உங்களை உற்சாகப்படுத்தி உயர்த்தி வைக்கும். குடும்ப வாழ்க்கை நல்ல முன்னேற்றமான பாதையில் வெற்றிகரமாகச் செல்லும். புதிய பொன், பொருட்கள் சேருவதில் இனி எவ்வித தடையுமின்றி இருக்கும். அண்டை, அயலாருடன் நல்லிணக்கம் உதவிகளும் அதிகரிக்கும். இருப்பிடத்தில் சௌகர்யங்கள் அதிகரித்து நன்றாகச் செயற்படும். பெற்றோர்களால் பெருமளவுக்கு உதவி, அனுசரணை ஏற்படும். கணவன், மனைவி உறவு உற்சாகத்தை அளிக்கும். மனைவி மூலம் பக்கபலம் பலவித இலாபமும் ஏற்படும். சகோதர இணக்கம் உதவி அனுசரணை போன்றவை செல்வாக்கைத் தரும் உடல் நலம் திருப்தி மகிழ்ச்சி தரும். நினைத்தவை எளிதில் அதிர்ஷ்டவசமாகவே ஈடேறி வரும். நீண்ட காலத் திட்டங்களைச் செயற்படுத்துவீர்கள்.

வருட மத்தியில் 17-05-2012இல் குரு பெயர்ச்சியடைவது சாதகமாக இல்லை என்பதால் அலைச்சலைக் குறைப்பது உடல் நலத்திற்கு நல்லது.

17-05-2012 முதல் உடல் நலத்தில் சிறு சிறு நலி சிரமம் வந்து விலகும். கொடுக்கல், வாங்கல்கள் மூலம் சில முக்கிய தேவைகள் பூர்த்தியாகும். நாட்பட்ட கடன் - வழக்குகள் பைசலாகும். வாகன வசதி புதிதாக மாற்றம் பெறும். குடும்ப வாழ்வில் தன்னிறைவு உண்டாகும். பழைய நண்பர்களால் நூதன முயற்சிக்கு வழி ஏற்படும். மற்றபடி ஆண்டு முழுவதும் பண வரவுகள் வந்த வண்ணமாகவே இருக்கும். தொழில் வளம் நல்ல மேன்மை அடையும். முயற்சிகளில் வெற்றி மேல் வெற்றி அமையும். நண்பர்களால் பல உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள். உறவினர்கள் வருகையும், விருந்துபசாரமும் மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். புதிய நவீன இயந்திரம் வாங்கி உபயோகிப்பீர்கள். தீடீர் இலாபங்கள் கிடைத்து உங்களை ஆச்சரியப்படுத்தும். போட்டிப் பந்தயங்களில் பல வெற்றிகளைக் காணுவீர்கள். வழக்கு விவகாரங்கள் சாதகமாகவே அமையும். கணவன், மனைவி உறவு நிலையில் அன்பு அதிகரித்து நல்ல இணக்கத்தைக் கொடுக்கும். மகிழ்ச்சியான வாழ்க்கையே இப்போது உங்களுக்கு.

### பெண்களுக்கு

திருமண முயற்சிகள் குடும்பத்தில் நடக்க வேண்டிய சுபகாரிய நிகழ்ச்சிகள் யாவும் இப்போது மிக நல்லபடியாக நடந்து உங்களை சந்தோசப்படுத்தும். இருப்பிடம் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் நல்ல பெயரும் அந்தஸ்தும் உண்டாகும். கணவன், மனைவி உறவு நிலை அன்னியோன்யமாக இருக்கும். குழந்தைகளால் நல்ல பாக்கியங்கள் கிடைக்கப்பெற்று, சந்தோஷப்படுவீர்கள். பெற்றோர் வகையில் நல்ல ஆதரவும் ஆலோசனைகளும் கொடுப்பார்கள். உடன் பிறந்த சகோதரர்களால் பிணக்குகள் நீங்கி ஆதரவாக செயற்படுவார்கள். திருமண முயற்சிக்கு குருபலம் 17-05-2012 வரை பெருமளவுக்கு உதவுவதாகும்.

### உத்தியோகஸ்தர்களுக்கு

தைரியம், தெளிவு, சிந்தனை கூடும். அதிகாரிகள், ஊழியர்களின் ஒத்துழைப்பு உண்டாகும். உத்தியோக உயர்வு, இடமாற்றம் போன்றவைகளில் முயற்சிகளின் பேரில் வெற்றி பெறலாம். உத்தியோக நிலையில் பெரிய வெற்றிகளை எதிர்பார்க்க முடியாது. சுபப் பலன்கள் போதியளவு இருந்துவரும்.

### வியாபாரிகளுக்கு

பற்று வரவுகளில் சரளமான போக்கு இருக்கும். வாடிக்கையாளர்களின் திருப்தி அதிக, இலாபம் ஏற்படும். போட்டியாளர்களைப் பற்றிய கவலைகள் நீங்கி விடும். பேரங்களில் நல்ல வெற்றியும் உண்டு. புதிய கிளை தொடங்கி வியாபாரத்தை அபிவிருத்தி செய்யலாம். பணம் பல வழிகளில் வரும்.

### தொழிலாளர்களுக்கு

தொழில் சம்பந்தப்பட்ட இடைஞ்சல்கள் இனிக் குறையும். தொழில் தகராறுகள், லே-ஒப்-லாக் அவுட் போன்ற தொல்லைகள், அரசாங்க அறிவிப்புகளால் ஒரு முடிவுக்கு வரும். இம்போர்ட், எக்ஸ்போர்ட் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்கு போனஸ் வருவாய் போன்றவை அதிகளவிலேயே கிடைத்து வரும். முதலாளி வர்க்கத்தினருடன் நல்ல இணக்கம் பெறுவீர்கள்.

### விவசாயிகளுக்கு

நில வளமும், நீர்வளமும், விவசாயம் செய்வதற்கு நல்ல படியாகக் கைகொடுப்பதால் எதிர்பார்த்ததைவிட அதிகமான மகசூலை குவித்து அதிக இலாபத்தை அடையலாம். உதவிகள் நல்ல படியாகக் கை கொடுக்க இருப்பதால் கடன் மற்றும் இதர சலுகைகளையும் கேட்டுப்பெறலாம்.

### மாணவர்களுக்கு

கல்வி, கேள்வி, தேர்வுகளில் உங்களுக்கே முதலிடம். உல்லாச சுற்றுப் பிரயாணங்கள் சென்று வர வாய்ப்புகள் கிடைக்கும். கேளிக்கை விருந்துபசாரங்கள் எல்லாம் அமோகமாக இருக்கும். மேற்படிப்பில் கவனம் செலுத்தலாம்.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இம்மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)


நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இந்தமாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறப்பு உரையொன்றை நிகழ்த்தவுள்ளார். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை டிசெம்பர் 21 ஆம் திகதிக்கு முன்பதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த உரையில், ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் அரசாங்கம் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி விளக்கவுள்ளார். சர்வதேச சட்டமீறல்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் பற்றியும் சர்வதேச சமூகத்தின் கவலைகளை இந்த உரையில் ஜனாதிபதி கூறவுள்ளார்.

இந்த உரை இன்னமும் முடிவடையாவிட்டாலும் இந்த இரண்டு விடயங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்று அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. ஆணைக்குழுவின் அறிக்கையை சிங்கள மற்றும் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யும் பணிகள் நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஜனாதிபதியின் சிறப்புரை தற்போதைய வரவு செலவுத்திட்ட கூட்டத்தொடர் டிசெம்பர் 21ஆம் நாள் முடிவதற்கு முன்பாக இடம் பெறும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நவீன மயமாகும் சுதந்திர சதுக்கம்



(கொழும்பு)

சுதந்திர சதுக்கத்தை அண்டியுள்ள பிரதேசங்களை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இதன் ஒரு கட்டமாக, அங்கு அமைக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டமைப்பு நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். நகர அபிவிருத்தி அதிகார சபை, பாதுகாப்பு அமைச்சு, மின்சக்தி அமைச்சு என்பன இணைந்து இந்த மின்சாரக் கட்டமைப்பை அமைத்திருந்தது.

சுதந்திர சதுக்கப் பகுதி சுற்றாட்லுக்கு ஏற்ற வகையில் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிரதேச மக்கள் ஓய்வாக இருப்பதற்கும் உடற்பயிற்சி போன்றவற்றில் ஈடுபடவும், சுதந்திர சதுக்கப் பகுதி திகழும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பேருந்துச் சங்கங்களின் அறிவுரை தேவையில்லை

## அமைச்சர் குமார் வெல்கம

(கொழும்பு)

பயணிகள் பேருந்துச் சேவைகள் தொடர்பில், பேருந்துச் சங்கங்கள் தமக்கு ஆலோசனை வழங்க வேண்டிய அவசியம் இல்லை என போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஹொரணையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

புதிய பேருந்தக்களை இறக்குமதி செய்வதற்கு, அகில இலங்கை பேருந்துச் சேவையாளர்களின் சங்கம் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், இவ்வாறாக பேருந்துக்கள் இறக்குமதி செய்யப்படுமானால், சகல சங்கங்களும் ஒன்றிணைந்து தொழிற சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கும் என்று அந்தச் சங்கததின் செயலாளர் அஞ்சன பிரியரஞ்சித் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதில் வழங்கும் முகமாகவே, அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார். மக்களின் தேவைக்கு முன்னுரிமை வழங்குவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் எனவும் அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் சுட்டிக்காட்டினார்.

## சீன அரசாங்கத்தின் நன்கொடையில்

# கலைஞர்களை சர்வதேச தரத்தில் உயர்த்த கொழும்பில் மகிந்த ராஜபக்ஷ கலையரங்கு

(கொழும்பு)

சீன அரசாங்கத்தால் நன்கொடையாகக் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கும் தாமரை தடாக மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கு எதிர்வரும் 15ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் சீனாவின் பிரதி அமைச்சரும் கலந்து கொள்ளவிருப்பதாக ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பீ. கனேகல தெரிவித்தார்.

இந்தக் கலையரங்கின் மூலம் இலங்கையின் கலைஞர்களுக்குப் புதிய பாதையொன்று திறந்திருப்பதாகக் குறிப்பிட்ட அவர் இதன் ஊடாக உள்ளூர் கலைஞர்கள் சர்வதேச ரீதியில் தமது திறமைகளை வெளிக்கொணர்வதற்கு அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கொழும்பு 7இல் அமைக்கப்பட்டிருக்கும் தாமரைத் தடாக மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கின் ஊடாக இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நட்பு மேலும் நெருக்கமடைந்திருப்பதாகவும் அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

ஐந்து மாடிகளைக் கொண்ட இந்தக் கலையரங்கம் 21 760 சதுர மீற்றர் பரப்பளவைக் கொணடது என இக்கலையரங்குக்குப் பொறுப்பான பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார். 13 உடைகள் மாற்றும் அறைகள் சிற்றுண்டிச்சாலை 306 வாகனங்கள் நிறுத்தக்கூடிய வாகனத் தரிப்பிட வசதி எனப் பல்வேறு வசதிகளைக் கொண்டதாக இந்தக் கலையரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. 5 ஆவது மாடியில் 350 பேரை உள்ளடக்கக் கூடிய திறந்தவெளி அரங்கொன்றும் காணப்படுகிறது.

இந்தக் கலையரங்கம் திறக்கப்பட்ட பின்னர் இதற்குள் எந்த விதமான உணவுப் பண்டங்களும் எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படாது என அந்த அதிகாரி குறிப்பிட்டார். இந்தக் கலையரங்கம் திறக்கப்பட முன்னரே எதிர்வரும் மார்ச் மாதம் வரையில் கலையரங்கம் முன்பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தேயிலைக்கான கேள்வி அதிகரிப்பு



(கொழும்பு)

கீழ் வலய தேயிலைக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக த பிஸ்னஸ் ஒன்லைன் இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது. வெளிநாடுகளில் இதற்கான கேள்வி அதிகரித்துள்ளதால் கொழும்புச் சந்தையிலும் இதற்கான விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் 2011ஆம் ஆண்டுக்கான தேயிலை ஏற்றுமதி வருமானம் கடந்த 2010 ஆம் ஆண்டை விட அதிகரிக்கலாம் என தேயிலை ஏற்றுமதி முகவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தவணைக் கட்டணத்தில் விமானப் பயணச் சீட்டு

(கொழும்பு)

சிறிலங்கன் எயார்லைன்ஸ் தனது வாடிக்கையாளர்களுக்காக கடனட்டையில் தவணை முறையில் விமானக் கட்டணத்தை செலுத்தக்கூடிய சலுகை முறையினை ஆரம்பித்துள்ளது. இதன்படி விமானக் கட்டணங்கள் கடன அட்டையினூடாக மூன்று ஆறு பன்னிரெண்டு அல்லது 24 மாதங்களில் தவணை முறையில் செலுத்த முடியும்.

இந்தியாவிற்கு ஆகக்குறைநதது மாதமொன்றுக்கு 725 ரூபாபடியும் ஆசியாவின் ஏனைய நாடுகளுக்கு மாதமொன்றுக்கு ஆகக்குறைந்தது 2 ஆயிரம் ரூபா வீதமும் ஐரோப்பிய நாடுகளுக்கு மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வீதமும் இதனைச் செலுத்தி முடிக்க முடியும். சலுகை அடிப்படையிலான இலகு தவணை முறையானது குடும்பத்தால் அனைவருக்கும் வரும் விடுமுறை காலத்தில் ஒரு புதிய அனுபவத்தை வழங்குமென சிறிலங்கன் எயார்லைன்ஸ் எதிர்பார்க்கிறது.

வாடிக்கையாளர்கள் இணையத் தளத்தினூடாக தமது கடனட்டையை பயன்படுத்தி விமான பயணச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்ய முடியும். கொடுப்பனவுகள் இலங்கை வங்கி கொமர்சியல் வங்கி எச்.எஸ்.பி.சி. செலான் வங்கி மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி ஆகியவற்றினூடாகத் தவணை முறையில் செலுத்த முடியும்.

# சிறைச்சாலையில் "எயிட்ஸ்" ஊர்வலம்



(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் உள்ள கைதிகள் சிலர் உலக எயிட்ஸ் தின நிகழ்வை முன்னிட்டு எயிட்ஸ் ஒழிப்பு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியபடி சிறைச்சாலையின் வெளிப்பகுதியைச் சுற்றி ஊர்வலமாக சென்றனர்.

உலக எயிட்ஸ் தினத்தையிட்டு நீர்கொழும்பு சிறைச்சாலையில் எயிட்ஸ் தொடர்பாக கைதிகளுக்கு விழிப்புட்டும் நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிமுதல் நடத்தப்பட்டது.இதன் ஒரு அங்கமாகவே எயிட்ஸ் கவனயீர்ப்பு ஊர்வலம் இடம் பெற்றது.

இதனை நீர்கொழும்பு கைதிகள் நலன்புரி சங்கம் நீர்கொழும்பு சிறைச்சாலை நிர்வாகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்வின் ஒரு பகுதியாக கைதிகள் சிலர் எயிட்ஸ் ஒழிப்பு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தி சிறைச்சாலையின் வெளிப்பகுதியைச் சுற்றி ஊர்வலமாகச் சென்றனர்.

# வவுனியாவில் ஊர்காவல் படையினர் பயிர்ச் செய்கை நடவடிக்கை



(வவுனியா)

வவுனியாவில் பல்வேறு இடங்களில் ஊர்காவற் படையினர் பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர் இதன் ஒருகட்டமாக மாமடு, மடுகந்தை, ரம்பவெட்டி ஆகிய இடங்களில் சுமார் 250 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்கையில் ஈடுபடுகின்றனர். இதில் சோளம், நெல்லு, கௌப்பி, பயறு, கடலை போன்றவற்றை பயிர் செய்கின்றனர்.

இதன் மூலம் இந்தத் தானிய வகைகளை மிகக்குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்து வருகின்றனர். இந்த நடவடிக்கையில் ஊர்காவற்படையை சேர்ந்த ஆண், பெண் இருபாலாரும் நேரடியாக பங்குபற்றிவருகின்றனர்.

மேலும் இவர்கள் சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒருகட்டமாக மழையினால் வீடு இழந்து பாதிக்கப்பட்ட ஊர்காவற்படையைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு புதிதாக வீடு ஒன்றை நிர்மாணித்து கொடுத்துள்ளதுடன் கால் இழந்த ஒருவருக்கு பல்வேறு வசதிகள் அடங்கிய வீட்டுடன் சேர்ந்த குளியலறை ஒன்றை நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர். (125)

# 95 அபிவிருத்தித் திட்டங்களில் இலங்கை முதலீட்டுச் சபை

(கொழும்பு)

இலங்கை முதலீட்டுச் சபை 95 அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன. இது தவிர மேலும் 92 திட்டங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் 36 முதலீட்டாளர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த நடவடிக்கைகள் குறித்த அறிக்கையிலேயே இந்த தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வருடத்தின் முதல் 9 மாத காலப்பகுதியினுள், சுற்றுலாத் திட்டங்களுக்காக வெளிநாட்டு நேரடி முதலீடாக 36 கோடியே 20 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1. Where does this story take place?..........................................

2. How was the parcel wrapped?..........................................

3. Who was Savani?:..........................................

4. Why doesn't the family read the letter?..........................................

5. What does Shanthi think is in the pot?..........................................

6. Why does Arun think that the powder is pepper?..........................................

7. What does the family do with the powder?..........................................

8. Why does Savani save the last bit of the powder?..........................................

9. How does Dr. Harry solve the mystery?..........................................

10. What was really in the pot?..........................................

**Test - 16**

**Write on any one of the following Use about 200 Words .**

a.. Write an essay on living in the future –what It will be like :-the environment
- the education
- the transport etc

b. Write an article to the school magazine suggesting a programme to
- educate Street children in srilanka you may use following guidelines:
- getting them to learn at school
- conducting afternoon classes
- establishing street schools

c. Write what you hope to after the O.L examination until the examination results are out.

d. Write an article about an irrigation scheme in Srilanka for example: the for Mahawali project

Include the following project
- how it was started / completed
- purpose of the project
- how the reservoir was boned
- who gets the benefits

..........................................

..........................................

..........................................

..........................................

..........................................

..........................................

..........................................

..........................................

..........................................







**General Certificate of Education (Ord.Level) Examination, December- 2011** Time: 3 Hour

# கல்வி முரசு

## ENGLISH LANGUAGE PART - II

யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**Test – I**

**Read the following classified advertisements and answer the questions given below.**

130 ------------------------------

Birds, Pets & Fish

**Beautiful** Kittens free to kind homes 15, Thelawal Road, Ratmalana.

Z4.86

**Young Parrots** for, taming and talking Finches, javas 650/=, Nekton vitamin Cat/ Dog 35G - 250/= cages and more birds. Contact 749545.

Z685

140 ------------------------------

**Sports & Games**

**Space walker** hardly used .expect 4000/=. Phone office 1393841, Residence 588444.

Z9648

Two **new** Golf Bags with attached carts and set of clubs for beginners. Call 605648.

Z9648

**Books & Magazines For sale**

**Computer Books** cheap edition clearance sale at half price, Bobe Agencies Limited, 80, Reclamation Road, Colombo. Tel. 821009

Z 1861

**Magazines,** Newspapers from India and Sri Lanka magazines, story books newspapers, school text books delivered at home. P. Sara, 16,Bandaranayaka Mawatha, Colombo 12, 696433, 510036.

149 ---------------------------

**Positions Vacant: Sales Personnel**

**Sales** Assistants (female) for ladies dress shop at Fashion City. Should be fluent in English below 30 years. Salary over 5000/= per month. Interview Monday, Tuesday 4 - 5 p.m. Shop No. 41, Fashion City.

Z 76

**Salesmen** for electronic car/ stereos VC[) players etc. Walk-in interview 20th after 2.00 p.m. Alka Tech, No. 75, First Lane, Kirullapona.

**Z9673.**

181 ---------------------------

**Board & Lodging Wanted**

***A* working** student girl from Kandy doing higher studies .needs a room with attached bath or an annex from Havelock Town, Borella, Thimbirigasyaya, Kirullapona in a secure surrounding. Contact 08-213

1) What are the books available at half price?..........................................

2) What sports item is available for beginners?..........................................

3) Samanthi is 24 years old-fluent in English and lives in Colombo. Which job suits her?..........................................

4) Which sports item can you buy for Rs. 4000/=?..........................................

5) Where can you get a free pet?..........................................

**Test - 12**

**Change the following Sentences in to passive form Example is shown to you**

1) Raja posted the letters last Monday..........................................

2) The police have arrested the thief from an old building just now..........................................

3) The workers will paint the temple within one month..........................................

4) The Cashier counts the money after 9pm..........................................

5) The English men planted coffee in Central Province..........................................

**Test – 13**

**Here is a part of an interview. It is about a "perfect weekend". Read the questions and match them with the answers. Write the number of the question in the correct box. The first one is done for you.**

1) How would you get there?..........................................

2) Where would you stay?..........................................

3) What medicine would you take with you?..........................................

4) What essential piece of clothing would you take?..........................................

5) What would you eat and drink?..........................................

6) What would you read?..........................................

7) What three things would you leave behind at home?..........................................

8) What three things would you most like to do?..........................................

9) To whom would you send a postcard?..........................................

10) What souvenir would you bring home?..........................................

| | |
|---|---|
| A whole pile of detective stories. | |
| Lots of everything. Fresh fruit, vegetables, ice-cream and chocolates. | |
| To a far off place. I'm not going to tell you its name. It's hot but green. | |
| Watch the stars, sleep under a tree, relax. | |
| Halfway by train and the rest on foot. | |
| My alarm clock, my word processor and the phone. | |
| At least twenty beautiful pictures and sweet memories. | |
| No one, I'd buy a lot, write two or three and then forget to post them. | |
| Nothing special but I'd need a large sunhat. | |
| I'd find a fisherman 's hut or anything with a roof would do. | |
| I'd like to have something for mosquito bites. | |

**Test – 14**

**Include the following. Use about 150 words.**

★ Where did you go

★ Who organized the trip

★ What you saw there

★ The importance of that place.

..........................................

..........................................

..........................................

..........................................

..........................................



Test – 15

**Read the following passage on "The American Pepper" and answer the questions given below.**

**The American Pepper**

"Mummy! Mummy!" shouted little Shanthi racing from the front door through to the kitchen. "There's a parcel. The postman's brought a parcel!" Her mother, Savani, looked at her in surprise. She had no idea who could have sent them a parcel. Maybe it was a mistake. She hurried to the door to find out. Sure enough, the postman was there, holding a parcel about the size of a small brick. "From America, madam," he said. "See! American stamps."

It was true. In the top right-hand corner of the brown paper parcel were three strange-looking stamps, showing a man's head. The package was addressed to Savani, in big, clear black letters. "Well, I suppose it must be from Great-Aunt Rainy," said Savani to herself, as the postman went on his way down the street, whistling. "Although it must be twenty years since we heard anything from her. I thought she would have been dead by now." Savani's husband Jeyarasa and her son Arun were just coming in from the garden, where Shanthi had run to tell them about the parcel. "Well, open it then!" said Arun impatiently. "Let's see what's inside!" Setting the parcel down in the middle of the table, Savani carefully began to tear open the paper. Inside, there was a large silver container with a hinged lid, which was taped shut. There was also a letter. "What is it? What is it?" demanded Shanthi impatiently. "Is it a present?" "I have no idea," said Savani in confusion. "I think it must be from Great-Aunt Rainy. She went to America almost thirty years ago now. But we haven't heard from her in twenty years. Perhaps the letter will tell us."

She opened the folded page cautiously, and then looked up in dismay. "Well, this is no help!" she said in annoyance. "It's written in English! How does she expect us to read English? We're poor people, we have no education. Maybe Rainy has forgotten her native language, after thirty years in America." "Well, open the pot, anyway," said Jeyarasa. "Let's see what's inside." Cautiously, Savani pulled the tape from the neck of the silver pot, and opened the lid. Four heads touched over the top of the container, as their owners stared down inside. "Strange," said Arun. "All I see is powder." The pot was about one-third full of a kind of light-grey powder. "What is it?" asked Shanthi, mystified.

"We don't know, darling," said Savani, stroking her daughter's hair. "What do you think?" Shanthi startedagain into the pot. "I think its coffee," she announced, finally. "American coffee." "It's the wrong colour for coffee, darling," said Jeyarasa thoughtfully. "But maybe she's on the right track. It must be some kind of food." Shanthi, by now, had her nose right down into the pot. Suddenly, she lifted her head and sneezed loudly. "Id god ub by doze," she explained. "That's it!" said Arun. "It must be pepper! Let me try some." Dipping a finger into the

said Savani, "we'll try it on the stew tonight. We'll have American-style stew!" That evening, the whole family agreed that the American pepper had added a special extra taste to their usual evening stew. They were delighted with it. By the end of the week, there was only a teaspoonful of the grey powder left in the silver container. Then Savani called a halt.

"We're saving the last bit for Sunday. Dr. Harry is coming to dinner, and we'll let him have some as a special treat. Then it will be finished." The following Sunday, the whole family put on their best clothes, ready for dinner with Dr. Harry. He was the local doctor, and he had become a friend of the family many years before, when he had saved Arun's life after an accident. Once every couple of months, Savani invited the doctor for dinner, and they all looked forward to his entertaining stories of his youth at' the university in the capital. During dinner, Savani explained to the doctor about the mysterious American pepper, the last of which she had put in the stew they were eating, and the letter they could not read. "Well, give it to me, give it to me!" said the doctor briskly. "I speak English! I can translate it for you."

Savani brought the letter, and the family waited, fascinated, as the doctor began to translate.' "Dear Savani: you don't know me, but I am the son of your old Great-Aunt Rainy. She never talked much to us about the old country, but in her final illness earlier this year, she told us that after her death, she wanted her ashes to be sent back home to you, so that you could scatter them on the hills of the country where she was born. My mother died two weeks ago, and her funeral and cremation took place last week. I am sending her ashes to you in a silver casket. Please do as she asked, and spread them over the ground near where she was born. Your cousin, George Leary."

# விளையாட்டு மைதானம் இல்லாததால் திறமைகளை வெளிப்படுத்த முடியவில்லை

## திருவள்ளுவர் கழகச் செயலாளர் குருபரன் கவலை

(யாழ்ப்பாணம்)

எமது பகுதியில் விளையாட்டு மைதானம் இல்லாத காரணத்தால் நாம் விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம் என யாழ்ப்பாணம் மடம் வீதி, திருவள்ளுவர் சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக்கழகச் செயலாளர் ஞா. குருபரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 1945ஆம் ஆண்டு எமது சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. எமது பகுதி வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்கு விக்கவும் நாம் அரும்பாடுபட்டு வருகின்றோம்.

இருப்பினும் எமக்கு விளையாட்டு மைதானம் அமைக்கக் கூடிய இடவசதிகள் இல்லை. ஆயினும் நாம் பொதுவான இடங்களில் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இரண்டு தசாப்த காலமாக விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். எமக்கான மைதானம் எதுவும் இல்லாததால் விளையாட்டில் எமது முழுத் திறமையையும் வெளிப்படுத்த முடியாது உள்ளது. மைதானம் இன்மை தொடர்பாக உயரதிகாரிகள் பலரிடமும் பல்வேறு கடிதங்களைச் சமர்ப்பித்து முறையிட்டுள்ளோம். ஆயினும் எமக்குப் பலனெதுவும் கிடைக்கவில்லை.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி உதவி புரிய வேண்டும் என வேண்டுகிறோம் என்றார்.




# அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவையின் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தலைமைக்கழகம் அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவை தமிழக முன்னாள் முதலமைச்சர் அமரர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் மற்றும் முன்னாள் அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவைத் தலைவர் அமரர் பொன் மதிமுகராஜாவின் நினைவு தினத்தை முன்னிட்டும், இயற்கை அனர்த்தமான சுனாமியின் 7ஆம ஆண்டு நினைவு கூறும் முகமாகவும் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று காலை 6. மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்றலில் குருமாரின் ஆசியுடன் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

மேற்படி விளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கான 40 மைல் துவிச் சக்கர வண்டி ஓட்டப் போட்டி, பெண்களுக்கான 15 மைல் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி 25 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி (10 மைல் ஆண்களுக்கானது), 8 மைல் மூன்று சில்லு சைக்கிள் ஓட்டப் போட்டி, கழகங்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியின் வீதி ஒழுங்குகள் கொக்குவில் சந்தியில் ஆரம்பித்து கே.கே.எஸ். வீதி வழியாக வைத்தியசாலை வீதியூடாக கச்சேரியை அடைந்து பின்னர் கச்சேரி ஊடாக முத்திரைச் சந்தி யில் பயணித்து பருத்தித்துறை வீதி யினூடாக வல்லைச் சந்தி, அச்சுவேலி அடைந்து, அச்சுவேலி வீதி வழியாக நிலா வரைச் சந்தி அதன் ஊடாக புன்னா லைக்கட்டுவன் சந்தி, சுன்னாகச் சந்தியை அடைந்து மீண்டும் கொக்குவில் சந்தியில் முடிவடையும்.

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி கொக்குவில் சந்தியில் ஆரம்பித்து கே.கே.எஸ். வீதி வழியாக திருநெல்வேலிச் சந்தி அடைந்து உரும்பிராய்ச் சந்தி, மருதனார்மடம் ஊடாக மீண்டும் கொக்குவில் சந்தியில் நிறைவடையும்.

இதேவேளை, ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி கொக்குவில் சந்தியில் ஆரம்பித்து கே.கே.எஸ். வீதி வழியாக தட்டாதெருச் சந்தி அதன் ஊடாக ஓட்டுமடம் சந்தி, ஆனைக்கோட்டை வழியாக சுதுமலைச் சந்தி, தாவடிச் சந்தி ஊடாக மீண்டும் கொக்குவில் சந்தியில் நிறைவடையும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எப். எஸ்)

# பாகிஸ்தான் வசம் ஒரு நாள் தொடர்



(மிர்பூர்)

பங்களாதேஷ் அணியுடனான 2ஆவது ஒருநாள் போட்டியில், பாகிஸ்தான் 76 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றியது.

மிர்பூரில் நேற்று முன்தினம் நடந்த இப் போட்டியில், முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 50 ஓவரில் நிறைவில் 7 விககெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹபீஸ் 32, யூனிஸ் 37, மிஸ்பா 37, உமர் அக்மல் 59, அப்ரிடி 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய பங்களாதேஷ் அணி முதல் நான்கு விக்கெட்டுக்களை 19 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. பின்னர் இணைந்த ஷாகிப் ஹசன் மற்றும் நசீர் உசைன் ஜோடி 5ஆவது விக்கெட்டுக்காக 106 ஓட்டங்களைச் சேர்த்தது.

இறுதியில் பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றுத்தோல்வியைத் தழுவியது. இதில் ஷாகிப் 34, நசீர் உசைன் 100 (11 பவுண்டரி, 1 சிக்சர்) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் உமர் குல் 4, ஹபீஸ் 2, அஜ்மல் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக நசீர் உசைன் தெரிவானார்.

# பட்டின்சன் சிறப்புப் பந்து வீச்சு இலகு வெற்றி பெற்றது ஆஸி.

(பிரிஸ்பேன்)

பட்டின்சனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி இலகுவான வெற்றிபெற்றுள்ளது.

அவுஸ்ரேலியா, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி பிரிஸ்பேனில் நேற்று நிறைவடைந்தது.

132 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆடிய நியூசிலாந்து அணி பட்டின்சனின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் நியூசிலாந்து அணி மளமளவென விக்கெட்டுக்களைப் பறி கொடுத்தது. இறுதியில் அதன் இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 150 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. இதில் பிரேவ்லீ 42, ரைடர் 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பட்டின்சன் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் லயன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

19 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி ஒரு விக்கெட்டை இழந்து



வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் அவுஸ்ரேலியா முன்னிலை வகிக்கின்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக பட்டின்சன் தெரிவுசெய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முழு உடற்தகுதி சகீருக்குத் தேவை

## கங்குலி

(கொல்கத்தா)

அவுஸ்ரேலியத் தொடரிற்கு முன்னர் தனது உடற்தகுதியை முழுமையாக மீட்டுக் கொள்வதற்கு உள்ளூரில் அதிக போட்டிகளில் சகீர்கான் விளையாட வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி தெரிவித்துள்ளார்.

சகீர்கான் இன்னும் 100 சதவீத உடல் தகுதியை எட்டவில்லை என்று நினைக்கிறேன். 50 சதவீத உடல்தகுதியுடன் அவரை அவுஸ்ரேலியாவிற்கு அழைத்துச் செல்வது சிறந்த முடிவாக இருக்க மாட்டாது. அவர் முழு உடல்தகுதியை அடைவதற்கு இன்னும் நிறைய போட்டிகளில் விளையாட வேண்டியது அவசியம். ஒரு ரஞ்சிப் போட்டியில் விளையாடியது மட்டும் போதாது. அவுஸ்ரேலிய டெஸ்ட் தொடர் எதிர்வரும் 26ஆம் திகதியே தொடங்கவுள்ளது. இதற்கு இன்னும் நாட்கள் உள்ளன. அதற்குள் அவர் இன்னும் அதிக ரஞ்சிப் போட்டியில் விளையாட வேண்டும். அவ்வாறு விளையாட்டும் பட்சத்திலேயே முழு உடற் தகுதியையும் பெற்றுக் கொள்ள முடியும். இதனை அவர் உணர்ந்திருப்பார் என நான் நினைக்கிறேன் என்றார்.

# இதே நிலை தொடரும்

## ஹோலி

(விசாகப்பட்டினம்)

எனது ஆட்டத் திறன் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. அடுத்து வரும் ஆட்டங்களிலும் இதே நிலை தொடரும் வகையில் பேணிக்கொள்வேன் என ஹோலி தெரிவித்தார்.

கடந்த முறை விசாகப்பட்டின மைதானத்தில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக ஆடிய போது சதம் அடித்தேன். இந்த மைதானத்தில் 2 ஆட்டங்களில் 2 சதங்கள் அடித்திருக்கிறேன். ஆனால் ஆடுகளத்தின் தன்மை வித்தியாசமாக இருந்தது. அவுஸ்ரேலியாவுக்கு எதிராக ஆடியபோது ஆடுகளம் மெதுவாக இருந்தாலும் ஓட்டம் குவிப்பதில் சிரமம் இல்லை. ஆனால் இந்த முறை ஓட்டம் குவிக்க கடினமாக உழைக்க வேண்டி இருந்தது. ரோகித் சர்மாவுடன் ஆடியது சிறப்பான அனுபவம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இரட்டையரில் தங்கம் ஒலிம்பிக்கின் இலக்கு



(மிலன்)

லண்டன் ஒலிம்பிக்கில், இரட்டையர் பிரிவில் தங்கம் வெல்வதே எங்களது இலக்கு என் வில்லியம்ஸ் சகோதரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வீனஸ் வில்லியம்ஸ் கூறியதாவது: ஒலிம்பிக்கில் இரண்டு முறை தங்கம் வென்றுள்ளோம். அடுத்த லண்டனில் நடக்கும் ஒலிம்பிக்கில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக சாதிக்க வேண்டும் என்பதே எங்களின் இலக்கு. தற்போது, மிலனில் நடக்கும் கண்காட்சிப் போட்டியில் விளையாடி வருகிறோம். இதனை ஒலிம்பிக் போட்டிக்கான முன்னோட்டமாகப் பார்க்கிறோம். கடந்த ஒரு வருடமாக இருவரும் காயத்தினால் பாதிக்கப்பட்டிருந்ததால், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியவில்லை. தற்போது குணமடைந்து வருகிறோம். அடுத்த ஆண்டு நிச்சயமாக நிறையப் பட்டங்களை வெல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

செரீனா இது குறித்து கூறுகையில், இந்த ஆண்டின் தொடக்கத்தில் சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் 175ஆவது இடத்தில் இருந்தேன். ஆனால் இந்த ஆண்டு இறுதிக்குள் முதல் 20 பேர் வரிசையில் முன்னேறுவேன் என்று நினைத்துக் கூட பார்க்கவில்லை. இது மகிழ்ச்சியாக உள்ளது. மூன்றாவது முறையாக லண்டன் ஒலிம்பிக்கில் இரட்டையர் பிரிவில் தங்கம் வெல்வதே எமது இலக்கு என்றார்.

# அவுஸ்ரேலியத் தொடருக்கு முன் பழைய நிலையை அடைவேன்

## சகீர்கான் நம்பிக்கை

(புதுடில்லி)

உடல் ரீதியாக நான் நன்றாக இருப்பதாக உணர்கிறேன். பந்து வீச்சில் பழைய நிலைக்குத் திரும்ப இன்னும் சில முன்னேற்றங்கள் தேவை. அவுஸ்ரேலியத் தொடருக்கு முன்னர் அந்த நிலையை அடைவேன் என்ற நம்பிக்கை உள்ளது என்று சகீர்கான் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியத் தொடருக்கு போதிய காலம் இருப்பதாகவே நான் உணர்கிறேன். அதற்கு முன் உள்ளூர் போட்டிகளில் சாதித்து பழைய நிலையை அடைவேன் என்று நம்புகின்றேன். இன்னும் நிறைய ஓவர்கள் பந்து வீசினால், நல்ல நிலையை எட்டி விடுவேன். அடுத்து வரும் சவுராஸ்டிராவுக்கு எதிரான ரஞ்சி ஆட்டத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். எனவும் தெரிவித்தார்.

# சமனிலை

(புதுடில்லி)

தெற்காசிய கால்பந்து போட்டி புதுடெல்லியில் நடைபெற்று வருகிறது. இந்தியா - ஆப்கானிஸ்தான் அணிகள் நேற்று முன்தினம் மோதிய ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமனிலையானது.

இப்போட்டியில் இந்திய அணி வெல்லும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் ஆப்கானிஸ்தான் சிறப்பான முறையில் ஆடி போட்டியை சமநிலைப்படுத்தியது.

# 3ஆவது போட்டி இன்று

(சென்னை)

இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி இன்றைய தினம் பகலிரவு ஆட்டமாக சென்னையில் இடம்பெறவுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இரண்டு வெற்றிகளைப் பதிவாக்கியுள்ள இந்திய அணி முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது.

# மனதை மாற்றியது இந்திய மத்திய அரசு

(சென்னை)

இந்தியாவில் சில்லறை வணிகத்தில் மத்திய அரசின் முடிவிற்கு ஆதரவாக கூட்டணிக் கட்சிகளுக்கு மத்தியில் கருத்தொற்றுமை ஏற்படும் வரை தற்காலிகமாக அன்னிய முதலீட்டுக் கொள்கையை நிறுத்தி வைக்கப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தன்னிடம் தெரிவித்ததாக மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

மம்தா பானர்ஜி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, சில்லறை வர்த்தகத்தில் நேரடி அன்னிய முதலீடு குறித்த இந்த முடிவு காரணமாக மத்திய அரசு தடுக்கி விழ தமது கட்சி ஒரு போதும் விடாது என்றார். ஆனால் மத்திய அரசின் சில்லறை வர்த் தகத்தில் அந்நிய முதலீடு குறித்த இந்த முடிவில் தமக்கு உடன்பாடு இல்லை எனவும் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.



தம்முடைய இந்த முடிவை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தெரிவித்திருப்பதாகவும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கூறியுள்ளார். எனினும் கருத்தொற்றுமையில் திரிணாமூல் காங்கிரஸ் வாக்களித்தால் மட்டுமே மத்திய அரசின் முடிவுக்கு பெரும்பான்மை வெற்றி கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகளின் அகதி முகாம் ஒன்றில் இலங்கைத் தமிழ்ச்சிறுமி...

# மீண்டும் நிலநடுக்கம் மக்கள் பதற்றம்

(டில்லி)

இந்தியாவின் யூனியன் பிரதேசமான அந்தமான் நிக்கோபர் தீவுகளில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அந்தமானை அடுத்துள்ள நிக்கோபர் தீவுகளில் கடந்த வியாழக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது.

இனையடுத்து நேற்று முன்தினம் அதிகாலை 1 மணியளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.4 ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடா கடலின் தென்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள நிக்கோபர் தீவுகளில் 38 கிலோ மீற்றர் ஆழத்தில் இந நிலநடுக்கம் உருவாகியுள்ளது. சக்தி குறைந்த நிலநடுக்கம் என்பதால் சுனாமி எச்சரிக்கை வடப்படவில்லை. இந்நிலநடுக்கத்தால் தூங்கிக்கொண்டிருந்த மக்கள் வீடுகளிலிருந்து வெளியேறி தெருக்களுக்கு வந்தனர். இதனால் உயிர்ச் சேதங்களோ, பொருட்ச் சேதங்களோ ஏற்படவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவின் முக்கியமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக விளங்குகின்ற அந்தமான் நிக்கோபர் தீவுகளில் மீண்டும், மீண்டும் நிலநடுக்கம் ஏற்படுவதால் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கிடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# இந்திய கடற்படைக்கு 49 புதியகடற் கலங்கள்



(விசாகப்பட்டினம்)

அடுத்த ஐந்தாண்டுகளில் இந்திய கப்பல்படையில் புதிதாக 49 கப்பல்கள் சேர்க்கப்பட உள்ளது. இவற்றில் நீர்மூழ்கி கப்பல்களும் அடங்கும் என கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கடற்படை துணைத் தலைவர் அனில் சோப்ரா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தற்போது கப்பல்படையில் 132 கப்பல்கள் உள்ளது. இவற்றில் நீர்மூழ்கி கப்பல்களின் எண்ணிக்கை 14 ஆகும். மேலும் நீர்மூழ்கி கப்பல்கள உட்பட 49 கப்பல்களின் கட்டுமானபணி நடைபெற்று கொண்டிருக்கிறது.

இவற்றில் 45 கப்பல்கள் இந்திய கப்பல் கட்டுமான கழகத்தால் கட்டப்பட்டு வருகின்றன. மற்ற நான்கு கப்பல்கள் வெளி நாடுகளில் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் இந்திய கப்பல் படையினர் சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா, இலங்கை ஆகிய நாடுகளுடன் கூட்டுபயிற்சியில் இணைந்து செயற்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு வங்காள கடல் பகுதியில் இந்திய-அமெரிக்காவின் மலபார் பயிற்சி நடைபெற உள்ளதாக சோப்ரா தெரிவித்தார்.

# இந்தியாவின் பெருந்தலைகளுக்கு விக்கிலீக்ஸ் வடிவத்தில் சனி மாற்றம்



வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கறுப்புப்பணம் பற்றிய தகவல்கள் அவர்களின் வங்கிக் கணக்குகளுடன் எதிர்வருகிற 2012 ஆம் ஆண்டு வெளியிடப்படும் என விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச் தெரிவித்துள்ளார்.


இந்தியத் தலைநகர் டெல்லியில் நடந்த ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை நிகழ்ச்சி ஒன்றில் வீடியோ மாநாடு மூலம் லண்டனில் இருந்து கலந்துகொண்ட அசாஞ்ச் கூறியதாவது, மத்திய புலனாய்வுத்துறை மின்னஞ்சல்களில் இருந்து சீன உளவுத்துறை தகவல்களைத் திருடியதற்கு என்னிடம் ஆதாரங்கள் உள்ளன.

இந்தியாவின் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் தொடர்புகளை மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து ஒட்டுக்கேட்டு வருகின்றன. அதனால் இந்தியா பாதுகாப்பான தகவல் தொடர்பைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று அசாஞ்ச் தெரிவித் தார்.

சில மாதங்கள் இடைவெளி விட்டிருந்த விக்கிலீக்ஸ் இணைய தளம் மீண்டும் ரகசிய தகவல்களை வெளியிட தொடங்கி விட்டது. இந்தத்தடவை 25 நாடுகளை சேர்ந்த 130 கம்பெனிகளை பற்றிய முக்கிய ஆவணங்களை வெளியிட்டு மிரளச் செய்துள்ளது விக்கிலீக்ஸ்.

# 27 வருடங்களின் பின்னரும் தொடரும் போபால் சர்ச்சை

(போபால்)



போபால் விஷவாயு விபத்தின் இருபத்து ஏழாவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் போபாலில் ரயில் பாதையை மறித்து போராட்டம் செய்ய முயன்ற ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல்கள் எழுந்துள்ளன.

யுனியன் கார்பைடு தொழிற்சாலையை பின்னர் வாங்கிய டௌ கெமிக்கல்ஸ் நிறுவனம் பாதிக்கபட்டோருக்கு கூடுதல் நஷ்டஈடுகளை வழங்க வேணடும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினர்.

மேலும் லண்டனின் அடுத்த வருடம் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுடைய உத்தியோக பூர்வ அனுசரணையாளர் பட்டியலிலிருந்து குறிப்பிட்ட நிறுவனத்தை நீக்கவேண்டும் என்று ஆர்வலர்கள் கூறுகின்றனர். ஆனால் ஏற்கனவே நஷடஈடுகளைக் கொடுத்து விவகாரத்தை தீர்த்து விட்டதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

போபால் விஷவாயு விபத்து என்பது உலகின் மிக மோசமான தொழிற்சாலை விபத்து ஆகும். இதில் குறைந்தபட்சம் 15 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 1984 இல் யூனியன் கார்பைடு இரசாயன தொழிற்சாலையில் இருந்து விஷ வாயு கசிந்ததால் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர்.

பலர் இன்றளவும் இந்த விபத்தின் தாக்கங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

# வித்தியாசமாக ஒரு நேர்த்திக் கடன்



கர்நாடக மாநிலத்திலுள்ள தக்ஷன கன்னடா என்ற மாவட்டத்தில் இருக்கும் சிறி சுப்ரமணியா கோயிலில் பிராமணர்கள் சாப்பிட்ட எச்சல் இலை மீது உருணடு நேர்த்திக் கடன் செய்யும் முறை ஒன்று உள்ளது. மடிஸ்னான என்று அழைக்கப்படும் இந்த வழிபாட்டு முறையானது மூட நம்பிக்கைகளை தொடர்ந்து மீள வலியுறுத்தவே பயன்படுத்தப்படுகிறது என்றும் ஜாதி வேறுபாடுகளை நிலை நிறுத்தவும் இது போன்ற வழிபாட்டு முறைகள் வழிவகுப்பதாகவும் அம்மாநிலத்தில் உள்ள தலித் அமைப்புக்கள் குற்றம் சாட்டுகின்றன.

இந்த வழிபாட்டில் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவர்கள் மட்டு மல்லாது - அனைத்து சமூகத்தினரும் பங்கேற்பதாக அம் மாவட்ட ஆட்சியர் சின்னப்ப கவுடா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பல இடங்களில் இதுபோல அறிவுக்குப் புறம்பான, மனித நேயமற்ற சடங்குகள் நடப்பதாகவும் ஆனால இவைக்குப் பின் தத்துவ அடிப்படைகள் ஏதுமில்லை என்று ஓய்வுபெற்ற சமூகவியல் பேராசிரியர் கிருஷ்ணன என்பவர் தெரிவித்துள்ளார்.

# சனி பெயர்ச்சிக்கு தயாராகும் தமிழகம்

(காரைக்கால்)

வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி சனிப் பெயர்ச்சி விழா வருகிற 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. தமிழகத்தின் திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேசுவரர் கோயில் சனிப் பெயர்ச்சியின் போது விசேட பூசைகள் நடைபெறுவது வழக்கம். இதனால் இந்த வருடம் வரவிருக்கும் பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துவதில் கோயில் நிர்வாகம், அரசுத் துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன.

கோயிலின் நான்கு வீதிகளிலும் சுகாதாரமான குடிநீர் வசதியும், குளப்பகுதி, வாகனம் நிறுத்துமிடங்கள், வீதிகள் என பக்தர்கள் அதிகமாகக் கூடுமிடங்களில் 100 இற்கும் மேற்பட்ட இடங்களில் குடிநீர்க் குழாய்கள் தாற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிப் பெயர்ச்சி விழாவின் போது ஒரேநாளில் 6 லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்தனர். இந்த முறை அதைவிடவும் கூடுதலான



பக்தர்கள வர வாய்ப்பு உள்ளதால், பாதுகாப்பு ஏற்பாடுகளும், பல்வேறு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. சனிப் பெயர்ச்சிக்கு முன்னும் பின்னும் சனீஸ்வர பகவானுக்கு சிறப்பு பூஜைகள் செய்யவும், தரிசனம் செய்யவும் நிதி அனுப்புவோர் கோயில் நிர்வாகத்தை அணுகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# சிரியாவின் போராட்டத் தலைவருக்கு பிரான்சில் பாதுகாப்பு

சிரியாவின் விடுதலைக்காகப் போராடி வரும் எதிர்க்கட்சித் தலைவர் புர்ஹான் கலியோனுக்கு பிரான்ஸ் நாட்டில் பாதுகாப்பு அளிக்கப் போவதாக பிரான்ஸ் உள்துறை அமைச்சர் கிளாடி குயண்ட் தெரிவித்தார். கலியோனுக்கு கடந்த சில நாட்களாக மிரட்டல் இருந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிரியாவின் ஜனாதிபதி பஷர் அல் அஸத் பதவி விலக வேண்டுமென்று குரல்கொடுத்துவரும் சர்வதேச நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ள அமெரிக்க துணையதிபர் ஜோ பைடன், துருக்கியுடனும் மற்ற நாடுகளுடனும் சேர்ந்து அமெரிக்காவும் அவ்வாறு கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார். துருக்கியில் பயணம் மேற்கொண்டு வருகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# ஐரோப்பாவில் சீன முதலீடு அரசியல் நோக்கம் கொண்டதல்ல

(பீஜிங்)



கடன் நெருக்கடியில் சிக்கியுள்ள ஐரோப்பிய நாடுகளை மீட்க, சீனா தன் வெளிநாட்டு முதலீடுகளைப் பயன்படுத்தப் போவதில்லை என, திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

யூரோ மண்டலப் பொருளாதார நெருக்கடியில், சீனா உள்ளிட்ட பிற நாடுகள் உதவ வேண்டும் என, ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல், பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி இருவரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் சீன வெளியுறவு துணை அமைச்சர் பூ யிங் இது பற்றிக் கருத்துத்தெரிவிக்கையில் சீனாவின் வெளிநாட்டு முதலீடுகள், கடனில் சிக்கியுள்ள நாடுகளை மீட்கப் பயன்படுத்தப்படும் என தவறான கருத்து கூறப்பட்டு வருகிறது. ஆனால், சீனாவின் வெளிநாட்டு முதலீடுகளின் நோக்கம் அதுவல்ல. ஐரோப்பிய மற்றும் சர்வதேச நிதியம் (ஐ.எம்.எப்.,) மற்றும் அமெரிக்காவின் கடன் பத்திரங்களை சீனா வாங்குவது அவற்றின் பாதுகாப்பு, உடனடியாக மாற்றக் கூடிய தன்மை மற்றும் சரியான இலாபவிகிதம் இவற்றுக்காகத் தான் எனத்தெரிவிததார். வெளிநாட்டு முதலீடுகள், உள்நாட்டு வருமானம் போல அல்ல. அவற்றின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஐரோப்பாவில் பொருளாதார நெருக்கடி தொடங்கியபின், அக்கண்டத்துடனான தன் ஏற்றுமதியை சீனா கடந்தாண்டில், 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

ஐரோப்பாவை மீட்கும் சர்வதேச முயற்சியில், சீனாவும் இணைந்தே ஆக்கபூர்வமாக செயல்படும். ஐரோப்பாவில் சீன முதலீடு அரசியல் உள்நோக்கம் கொண்டதல்ல. சந்தைப் பொருளாதார நியதிகளை நிச்சயம் பின்பற்றுவோம் எனத் தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தானில் கடும் பஞ்சம்



(மஸார் இ ஷரீப்)

போரால் சீரழிந்துள்ள ஆப்கானிஸ்தானின் வடபகுதியில் நிலவி வரும் கடும் பஞ்சத்தால், 26 இலட்சம் பேர் வறுமை மற்றும் பசியின் பிடியில் சிக்கி அவதிப்படுவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.ஆப்கனின் வடபகுதியில் உள்ள 14 மாகாணங்களில் கடந்த 8 ஆண்டுகளாக கடும் பஞ்சம் நிலவுகிறது. அந்த மாகாணங்களில் உள்ள நீர்நிலைகள் அனைத்தும் வற்றி விட்டன. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வாழ்விடத்தைக் காலி செய்து வேறிடங்களுக்குச் செல்கின்றன. நூற்றுக்கணக்கான குழந்தைகள் ஊட்டச் சத்துக் குறைபாட்டால் அவதியுறுகின்றனர். சாப்பாட்டுக்காக மக்கள் தங்கள் கால்நடைகளை விற்று வயிற்றுப்பாட்டை சமாளித்து வருகின்றனர். இந்நிலையில் பனிக் காலம் நெருங்கி வருவதால் அரசு மற்றும் நிவாரண அமைப்புகள், மக்கள் பனிக் காலத்தை சமாளிப்பதற்காக பல்வேறு ஏற்பாடுகளை விரைந்து செயற்படுத்தி வருகின்றன. பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடும் குளிர் அடிக்கும் என்பதால், அங்குள்ள குடும்பங்கள் மிகவும் அபாயகட்டத்தில் உள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

# தன்னுடைய உளவு கருவியை தானே அழித்தது!



ஹிஸ்புல்லா போராளிகள் காட்டில் தேடுதல் நடத்தும் போது.

இஸ்ரேலிய இராணுவம், லெபனான் நாட்டுக்குள் ரகசியமாக இயக்கிய உளவு பார்க்க வைத்திருந்த கருவி ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேலிய இராணுவமே அழித்து விட்டுச் சென்றிருப்பதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது தெற்கு லெபனானில் அவர்களுக்குத் தெரியாமலேயே ஒரு தொலைத்தொடர்பு வலையமைப்பு இயங்கி வருவதை ஹிஸ்புல்லா அமைப்பின் உளவுத்துறை கண்டுபிடித்திருக்கின்றது.

அந்தனை லெபனானின் தென்பகுதியில், ஸ்ரி∴பா, டெய்ர்-கி∴பா ஆகிய இரு கிராமங்களுக்கு மத்தியில் எங்கோ ஒரு இடத்திலுள்ள கருவியால் கன்ட்ரோல் பண்ணப்படுகின்றது என்பதையும் ஹிஸ்புல்லா உளவுத்துறை தமது கருவிகள் மூலம் கண்டு பிடித்தனர். இந்த இரு கிராமங்களுக்கும் இடையே ஒரு காட்டுப் பகுதி உள்ளது. அதற்குள் எங்கேயோதான் இந்தக் கருவி இருந்து இயங்க வேண்டும் என்று புரிந்து கொண்ட ஹிஸ்புல்லா, தமது போராளிகளை காட்டுப் பகுதிக்குள் கடந்த வெள்ளிக்கிழமை காலையில் அனுப்பி வைத்தது. அங்கே தேடுதல் நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டார்கள்.

காட்டுக்குள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த ஹிஸ்புல்லா ஆட்கள் தமக்கிடையே தொலைத் தொடர்பு கருவிகள் மூலம் பேசிக் கொண்ட சிக்னல்களை, காட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த உளவு பார்க்கும் கருவி உணர்ந்து கொண்டது. அந்தக் கருவியை இஸ்ரேலில் இருந்து கண்காணித்துக்கொண்டிருந்த இஸ்ரேலிய உளவுத்துறையினர், தமது உளவு பார்க்கும் கருவியை ஹிஸ்புல்லா நெருங்கி விட்டது என்பதைப் புரிந்து கொண்டனர்.

ஹிஸ்புல்லாவிடம் தமது கருவி அகப்படுவதை தவிர்க்க, அதை அழித்துவிடுவதை தவிர வேறு வழியில்லை என்று புரிந்துகொண்ட அவர்கள், இஸ்ரேலிய இராணுவத்துக்கு அறிவிக்க, அவர்கள் தமது ஆளற்ற உளவு விமானம் ஒன்றை லெபனானிலுள்ள காட்டுக்கு மேலே அனுப்பி, குண்டுவீசி கருவியை முற்றாக அழித்து விட்டனர்.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

ஹெலோ ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் கண்ணிவெடி அகற்றலுக்கான பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள இருபாலாரும் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் சுயவிபரக் கோவையை ஹெலோரஸ்ட் இல 12 நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பண்ணை ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை ஆர்வமுள்ளவர்கள் 0771518354 இற்கு தொடர்பு கொள்ளவும்.

வைத்தியர் குடும்பத்தில் உள்ள இரு சிறுபிள்ளைகளைப் பராமரிக்கக் கூடிய ஒரு பெண் தேவை. ஆர்வமுள்ளவர்கள் Dr.தெய்வேந்திரன் 350 பலாலி வீதி, திருநெல்வேலி என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

Elephant House ஐஸ்கிறீம் வியாபாரம் செய்வதற்கு முச்சக்கர வண்டிச் சாரதிகள் மற்றும் கணக்காளர் நிர்வாக முகாமையாளர் (இருபாலாரும்) தேவை. ஆர்வமுடையவர்கள் இல 56 மணிக் கூட்டு லேன் (நீராவியடி) யாழ்ப்பாணம், 0779910154 இற்கு தொடர்பு கொள்ளவும்.

மலேசியாவில் உள்ள தமிழ்க் குடும்பங்களுக்கு வீட்டுப்பணிப் பெண்கள் தேவை. இரண்டு வருட கால ஒப்பந்தம் பயண ஏற்பாடுகள் தங்குமிடம், உணவு, அனைத்தும் இலவசம் ஆர்வமுள்ளவர்கள் GOODLINE Manpower Services 38/3 (மூன்றாவது மாடி) Symonds Road, Col-10 0113091521, 0773179592 இற்கு தொடர்பு கொள்ளவும்.

சேவிஸ் ஸ்ரேசனுக்கு அனுபவமுள்ள, பழப விரும்பும் வாகனச் சுத்திகரிப்பாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சங்கீதன் சேவிஸ் ஸ்ரேசன் பருத்தித்துறை வீதி புத்தூர் அல்லது ஜெயக்குமார் ஐ 021 4900031 இல் தொடர்பு கொள்ளவும்

கொழும்பில் உதவித்தாதியர் பயிற்சியும், வேலைவாய்ப்பும் ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரையான நேரத்தில் இல-22 செம்பாட்டு ஒழுங்கை பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில் என்ற முகவரிக்கு நேரில் வரவும் மேலதிக விபரங்களுக்கு 0777730708, 0779355085 இற்கு தொடர்பு கொள்ளவும் உணவு, தங்குமிடம் இலவசம்.

STP கணினி நிறுவனத்திற்கு கணினி திருத்துனர் வரவேற்பாளர் தேவை. ஆற்றலும், ஆர்வமும் உள்ளவர்கள் எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் STP computer world (put) Ltd po Box 158 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கு கணிதம், விஞ்ஞானம் தமிழ், வரலாறு, சங்கீதம், நடனம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. ஆர்வமுள்ள பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர் கள் உயர்தரம் சித்தி எய்திய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் (நடனம், சங்கீத பாடங்களுக்கு பெண்கள் மட்டும்) ஆர்வ முள்ளவர்கள் சுயவிபரக்கோவையை எதிர்வரும் 10.12.2011 இற்கு முன்னர் மாகாதேவா ஆச்சிரமர் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

தோட்டத்தில் தங்கி வேலை செய்ய ஒரு வயோதிபக் குடும்பம் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0772881103 இற்கு தொடர்பு கொள்ளவும்.

அரச காப்புறுதி நிறுவனமான இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் புதிதாக ஆரம்பிக்கவுள்ள சாவகச்சேரி கிளைக்கு Manager, Bank Assurance 0fficer, Team Leader, Advisur தேவை. ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் எதிர்வரும் 14.12.2011இற்கு முன்னர் சுயவிபரக்கோவையை பிராந்திய முகாமையாளர் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இல 571 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பிரபலமான நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களை விநியோகம் செய்ய விநியோக உதவியாளர் தேவை ஆர்வமுள்ளவர்கள் 0773923036 இற்கு தொடர்புகொள்ளவும்.

பிரபலமான நிறுவனம் ஒன்றிற்கு பெண் வரவேற்பாளர், வாகன சாரதி தேவை. ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் சுயவிபரக் கோவையை employpap@yahoo.co.uk அல்லது 011-4209519 என்ற தொலைநகலுக்கு அனுப்பி வைக்கவும்.

வெள்ளவத்தையில் இயங்கும் நிறுவனத்திற்கு Graphic designer தேவை ஆற்றல் உள்ளவர்கள் நாளை 2 மணி தொடக்கம் 5 மணிவரை Sic,No.1 Vaverset place, Wellawaffe என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

நீர்கொழும்பில் சலூன் ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை. உணவு தங்குமிடம் இலவசம் சம்பளம் 25000 +கொமிஷன் ஆற்றல் உள்ளவர்கள் 0716387667, 072 4933667 இற்கு தொடர்பு கொள்ளவும்.

சேட், டவுசர், தைக்கக் கூடிய ஆண்கள் தேவை. ஆற்றல் உள்ளவர்கள் New star Textiles & Tailors No. 126,St A nthony\s Mawatha Col-13 0115835586, 077970727 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கொழும்பில் உள்ள Fast Food கடை ஒன்றிற்கு Delivery Boys மற்றும் உதவியாளர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0777721501 இற்கு தொடர்புகொள்ளவும் நல்ல சம்பளம் வழங்கப்படும்.

# பனைசார் உற்பத்தியை அதிகரிக்க ஊர்காவற்றுறையில் நடவடிக்கை

(ஊர்காவற்றுறை)

பனை சார்ந்த உற்பத்திகளில் ஈடுபடும் குடும்பங்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கி லான சந்திப்பொன்று ஊர்காவற் றுறை பிரதேச சபைத் தலை வரும் ஈ.பி.டி.பி.யின் ஊர்காவற் றுறை பிரதேச அமைப்பாள ருமான ம.ஜெயகாந்தன் தலை மையில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்றது.


பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இச் சந் திப்பில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தின் சார்பில் அதன் தலைவர் ஜெயசீலன், பொதுமுகாமையா ளர் ஜெயபாலன், செயலாளர் பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பனை உற்பத்திகளை நம்பி வாழும் குடும்பங்கள் அன்றாட வாழ்க்கையைச் சமாளிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக் குவதாகவும் அவர்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்த பனம் பொருள் உற்பத்திகளை முன் னெடுப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு உதவ வேண்டு மென சங்கத்தின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர்.

பனை உற்பத்திகளை ஆரம் பிக்கும் பட்சத்தில் அங்கு வாழும் பனம்பொருள் உற்பத்திகளில் ஈடு படும் பெரும்பாலான குடும்பங் களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் சாத்தி யம் இருப்பதும் கவனத்திலெடுக் கப்பட்டது.

அனைத்து நிலைமைகளை யும் கேட்டறிந்து கொண்ட பிர தேச சபைத் தலைவர் ஜெய காந்தன் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா அவர்களின் ஊடாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினத் துடன் தொடர்பு கொண்டு ஊர் காவற்றுறை நாராந்தனையில் பனை வெல்லம் உற்பத்தி செய் யும் தொழிற்சாலை ஒன்றை எதிர் வரும் தை, மாசி மாதங்களில் நிறுவுவதோடு தேவையான உற் பத்தி உபகரணங்களையும் கொள் வனவு செய்வதற்கு ஏற்பாடு களை மேற்கொள்வதாக சபை யின் தலைவர் குறிப்பிட்டார்.

அத்தோடு உற்பத்தி செய்யப் படும் பனை வெல்லம் மற்றும் பனைசார் உற்பத்திகளுக்கான தரமான சந்தையை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மூலமாக ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினர்.



தேசிய மட்ட கணித புதிர் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 8 மாணவி தபேந்திரன் அபிசேகாவிற்கு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன சான்றிதழ் மற்றும் தங்கப்பதக்கம் வழங்குவதை காணலாம். (116)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெடுந்தீவு மக்களுக்கு உலருணவு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 25 குடும்பங் களுக்கான உலருணவு விநியோகம் கடந்த இரண்டாம் திகதி நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் வைத்து வழங்கப் பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நிலையினை கருத்திலெடுத்த நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் றெக்சியன் ரஜீவ் அவர்கள் உடன் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக முதற்கட்டமாக ஒருவருக்கு 385 ரூபா பெறுமதியான உலருணவுகள் வழங்கப்பட்டன.

பாதிப்புக்குள்ளான குடும்பத்தில் மேலதிக அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 105 ரூபா பெறுமதியான உலருணவுகள் வழங்கப்படுவதாகவும் இதன் இரண்டாம் கட்டமாக அடுத்த வாரத்தில் 151 குடும்பங்களைச் சேர்ந்த 410 பேருக்கு நிவாரணமாக உலருணவுகள் வழங்கப்படவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## “நம் ஊரில் நத்தார்” மாகாணமட்ட போட்டி

(முளங்காவில்)

ஜனாதிபதி செயலகத்தினால் வடபகுதியில் முதல்முறையாக "நம் ஊரில் நத்தார்" என்னும் போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 17ஆம் திகதி மன்னார் முருங் கனில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி நிகழ்வுகளாக ஏழு நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

சிறந்த நத்தார் தாத்தா 15 வயதின் கீழ், 15 வயதின் மேல், தார் கேக்,சிறந்த நத்தார் மரம், சிறந்த பாண்ட் வாத்திய இசை, சிறந்த நத்தார் பாலகன் தொட் டில், ஆகியவற்றுக்கு பரிசில் கள் வழங்கப்படவுள்ளன.

மேலதிக விபரம் பெறவிரும் புவோர் 0718220910 இலக்கத் துடன் தொடர்புகொண்டு பெற முடியும் என ஜனாதிபதி செய லக இணைப்பாளரினால் அறி விக்கப்பட்டுள்ளது. (112)


## வீதிக்கு பெரியார் பத்மநாதனின் பெயரை சூட்டுமாறு கோரிக்கை

வவுனியா மாவட்டத்தின் பல்வேறு அமைப்புகளில் செயற்பட்டு சமூக தொண்டாற்றிய சாஸ்திரிகூழாங்குளத்தினை சேர்ந்த செ. பத் மநாதனின் பெயரினை ஞாபகமூட்டும் வகையில் அவர் இறு திக்காலத்தில் வாழ்ந்த குருமண்காடு 4 ஆம் ஒழுங்கைக்கு பெரி யார் பத்மநாதன் என பெயர் சூட்டுமாறு வவுனியா சுத்தா னந்த இந்து இளைஞர் சங்கத்தினர் வவுனியா நகரசபை தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையில்:

வவுனியா சாஸ்திரிகூழாங்குளத்தை சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா பத்மநாதன் வவுனியா மாவட்டத்தில் மிகப்பிரபலமான பொது சேவையாளர் ஆவார். வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கம் 1952 ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு ஆரம்பகர்த் தாக்களில் ஒருவராவார். இறக்கும் வரை சங்கத்தின் உறுப்பினராக இருந்துள்ளதுடன் பல சங்கங்களிலும் தலைவராக செயற்பட்டு மக்களுக்கு சேவையாற்றியதுடன் ஆயுர்வேத வைத்தியரான இவர் கிராம மக்களுக்கு வைத்திய சேவையினை இலவசமாக ஆற்றி யிருந்தார்.

இவ்வாறான சமூக சேவையாளரின் பெயர் வவுனியா மாவட்டத் தில் பிரபலமாக்க செய்யவேண்டியது அவரது பிற்சந்ததியினராகிய எமது கடமையாகும். இவரது பெயரை ஞாபகமூட்டும் வகையில் இவர் இறுதிக்காலத்தில் வாழ்ந்த வவுனியா குருமண் காட்டைச்சேர்ந்த '4ஆம் ஒழுங்கை' என்ற வீதிக்கு 'பெரியார் பத்மநாதன்' வீதி என பெயர் சூட்டுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (125)



# பிள்ளைகளின் பாதுகாப்பு பெற்றோர் கையிலேயே உள்ளது

இளைஞர் யுவதிகள், மாணவர்களிடையே தற் காலத்தில் ஏற்பட்டு வருகின்ற சமூகச் சீர் கேடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் யாழ். மாநகர சபை உறுப்பினர் அ.கிளபோடாசியஸ் (ஜம்பிரி) அனு சரணையுடன் துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப் பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது.

அண்மைக்காலங்களில் பிள்ளைகள் இருபாலா தொடர்பான குற்றச் செயல்கள், அவர்களைத் தொடர்புபடுத்தி இழைக்கப்படும் குற்றங்கள் அதிக ரித்து வருவதனை நாங்கள் அனைவரும் அறிவோம். பிள்ளைகளைக் கொண்டு முறையற்ற நடத்தைகளி லான குற்றங்களுக்கு ஈடுபடுத்தல், பெண் பிள்ளை களை பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தல், பிள் ளைகளுக்கு போதைப் பொருட்களை பெற்றுக் கொடுத்தல், ஆபாச சஞ்சிகைகள், படங்களை வழங்கி அவர்களை தவறான வழிக்கு இட்டுச் செல் லல் போன்றவைகளையும் அதிகரிக்கும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான சீர்கேடு கள் நடந்தேறுவது வயது வந்தவர்களாலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே வளர்ந்து வரும் எதிர்காலத்திற்குரிய எம் சிறார்களையும் மழலைச் செல்வங்களையும் பாதுகாப்பது பெற்றோராகிய எமது கடமையாகும். எனவே பிள்ளைகள் மட்டில் பின்வரும் விடயங் களில் கவனமெடுக்கும்படி வேண்டிக் கொள்கின் றோம். தவறின் எம்பிள்ளைகளும் இந்நிலைக்கு ஆளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாமே காரணிகளாவோம்.

பிள்ளைகளுடன் நெருக்கமான தொடர்பையும், அவர்கள் மேல் அதிக கவனமும் எடுங்கள் அவர் கள் சென்று வருகின்ற இடங்களையும் பார்த்துக் கொள்ளுங்கள் யார் யாருடன் சேர்ந்து பழகுகிறார் கள், அவர்கள் செல்கின்ற பிரயாணம் பற்றியும் விசாரித்து அறிந்து கொள்ளுங்கள்.

சிறுவர்களுக்கு இழைக்கப்படும் குற்றங்கள் பற்றிய அறிவை விளக்கமாகச் சொல்லி அப்படியான குற்றங் களுக்குள் அகப்படாமல் இருக்க வழிவகைகளைக் கூறுங்கள்.

பிள்ளைகள் பாடசாலை, ரியூசன் சென்று வீடு திரும்பும் போது சனம் அதிகம் நடமாடுகின்ற பாதை களைப் பயன்படுத்த அவர்களை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். உரிய நேரத்தில் வீட்டிற்கு வந்து சேருவதை அவதானித்துக்கொள்ளுங்கள் வருகை யில் தாமதம் ஏற்படின் உடனடியாக அவர்கள் வருகின்ற பாதைக்குச் செல்லுங்கள் காலதாமதத்தை அறிந்து கொள்ளுங்கள்.

வீட்டில் பிள்ளைகளின் பாதுகாப்பில் அதிக கவன மாக இருங்கள் பிள்ளைகளை வீட்டுடில் விட்டு நீங் கள் வெளியே சென்று திரும்புகையில் (குறுகிய/ நீண்ட தூர பயணத்தில்) அப்பிள்ளையின் பாது காப்புப் பற்றி பொறுப்பாக இருங்கள் வீட்டில் தங்கியிருக்கும் உறவினர்கள் பற்றியும் அறிந்து வைத்திருங்கள் உறவினர்கள், அயலவர்கள் போன்ற வர்களால் பிள்ளைகள் தொந்தரவுக்கு உட்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றது. என்பதை மனதில் நிறுத்துங்கள்.

பாடசாலையில் பிள்ளையின் கல்வி சம்பந்த மான செயற்பாடுகளை அவதானித்து மாற்றங்கள் காணப்படின் அதற்கான காரணத்தை அறிய முயற் சியுங்கள்.

பாடசாலையில் பொறுப்பாசிரியர், அதிபர் ஆகியோருடன் கூடிய சந்தர்ப்பங்களில் பிள்ளை களின் கற்றல், ஒழுக்கம் சம்பந்தமான விடயங்களை யும் பாடசாலை வரவு தொடர்பாகவும் அறிந்து கொள்ளுங்கள்.

பாடசாலையில் மேலதிக வகுப்புக்களுக்கோ அல்லது நிகழ்வுகளுக்கோ, பயிற்சிகளுக்கோ சமூக மளிக்கவேண்டிய அவசியமிருப்பின் அது தொடர் பான நாட்களைப், பிள்ளைகள் அவற்றிற்கு ஒழுங்காக சமூகமளிக்கின்றார்களா? என அறிந்து கொள்ளுங் கள்.

பாடசாலை செல்லும் போது கல்வி உபகரணங் கள் தவிர வேறு உடைகளை எடுத்துக்கொண்டு செல்கின்றனரா என்பதை அவதானித்துக்கொள்ளுங் கள் ஏனெனில் பாடசாலைசெல்வதாக கூறிவிட்டு வேறு தவறான இடங்களுக்குச் சென்று குற்றவாளி களாக இனங்காணப்படுகின்றார்கள்.

பாடசாலையில் பிள்ளையுடன் கற்கும் சகமாண வர்கள் பற்றி அறிந்து வைத்துக்கொள்ளுங்கள். பிள்ளைகளை சந்திக்கவரும் வேறு நண்பர்களை இனம் கண்டு கொள்ளுங்கள்: அவர்கள் வருவதற் கான காரணத்தையும் தெரிந்து வைத்திருங்கள்.

முன்பு அறிமுகமில்லாத ஒருவரால் கொடுக்கப் படும் இனிப்புப் பண்டங்கள் பணம் அல்லது வேறேதும் பொருட்களைப்பெற்றுக்கொள்ளாமலிருப்பதற்கு அவர்களைப் பழக்கப்படுத்திக்கொள்ளுங்கள்.

பிள்ளைகள் தேவைக்கு மேலதிகமாக பணம் வைத்துள்ளார்களா என அவதானித்து அப்பணம் எவ்வாறு அவர்களுக்கு கிடைத்திருக்கின்றது என்ப தனை உறுதி செய்து கொள்ளுங்கள். மேலதிக பணம் கேட்கும் சந்தர்ப்பங்களிலும் நன்றாக கார ணத்தை விசாரித்து அறிந்து பணத்தைக்கொடுங்கள் போதைப் பொருட்களை பெற்றுக்கொள்ள பணம் அவர்களுக்கு ஒரு கருவியாக அமைந்துவிடும்.

பிள்ளைக்கு முன் மாதிரியாக பெற்றோர்கள் வாழ நடவடிக்கை எடுங்கள்.

பிள்ளைகள் முறையற்ற பயத்தினால் பீடிக்கப்பட்டு இருக்கிறார்களா என அவதானித்துக் கொள்ளுங்கள் அவ்வாறான ஒரு பயம் பிள்ளைக்கு ஏற்பட்டிருப்பின் அதற்குரிய பொறுப்பு வாய்ந்த அதி காரிகளுடன் தொடர்பை ஏற்படுத்துங்கள். (68)

# வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் விசேட செயற்திட்டங்கள் அமுல்

(நல்லூர்)

அரியாலை - பூம்பூகார் மற்றும உதயபுரம் பகுதியில் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் விசேட செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அண்மையில் புதிதாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட ஜே/89, ஜே/90 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு பல்வேறு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகப் பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக பூம்புகார் மற்றும் உதயபுரம் பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இதனையடுத்து அப்பகுதி மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையில் தற்காலிகக் கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்த இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வாழ்வாதாரப் பிரிவு அதிகாரிகள் மீள்குடியேற்றப்பட்ட மேற்படி பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், மக்களுக்கான உட்கட்டமைப்பு வேலைத திட்டங்கள் மற்றும் தேவையான வாழ்வாதார உதவிகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப்பணிப்புரை விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் ஏற்கனவே பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிப்பங்களிப்புடன் முந்நூறு மலசல கூடங்கள் மக்கள் பங்களிப்புடன் கட்டிக் கொடுக்கப்பட்டு வருவதுடன், "திவிநெகும" திட்டத்தின் கீழ் கால் நடை, கைத்தொழில், சந்தைப்படுத்தல் வேலைத்திட் டங்களுக்காக பெருமளவு நிதியும் இப் பகுதி மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடதக்கதாகும். (26)

# யாழ்ப்பாணம் உட்பட நாடெங்கிலும் 35 ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள்

## அமைச்சர் பஸில் தெரிவிப்பு

(கொழும்பு)

உல்லாசப் பயணத்துறையை மேம்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் 35 ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி தலைநகர் கொழும்பில் 11, கம்பஹாவில் 2, நீர்கொழும்பு 1, பேருவளையில் 4, யாழ்ப்பாணத்தில் 2, திருமலை மற்றும் மட்டக்களப்பில் 7, நுவரெலியாவில் ஒன்று என இந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் அமைக்கப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், உல்லாச பயணத்துறை வலயமாக, மேல்மாகாணத்தில் கட்டுநாயக்கா, கம்பஹா மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்கள் உருவாக்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# இந்திய மீனவர்கள் இன்று விடுதலை?

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட, இந்திய மீனவர்கள் இன்று விடுதலை செய்யப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் இன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர். மீனவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐந்து மீனவர்களையும் விடுதலை செய்வது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அரசிற்கு சரியான பாதையை மகாசங்கம் காட்ட வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

அரசாங்கம் தவறான வழியில் செல்லும்போது சரியான பாதையைக் காண்பிக்கும் உரிமை மகாசங்கத்தினருக்கு உள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அந்த நடவடிக்கையை மகா சங்கத்தினர் சிறப்பாக மேற்கொண்டு வருவதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

அம்பலாங்கொடை பட்டபொல சுபத்திராராம விகாரையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

விமர்சிப்பதற்கான உரிமை மக்களுக்கு உள்ளதெனவும் அதனை எதிர்கொள்ள முடியாவிடின் அரசியலில் நீடிக்க முடியாது.

தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் மனித நேய பயணத்தை குறுகிய அரசியல் நோக்கங்களால் தடுக்க முடியாது.

2005 ஆம் ஆண்டில் நாட்டைப் பொறுப்பேற்கும் போது காணப்பட்ட சவால்களையும் ஜனாதிபதி இதன போது நினைவு கூர்ந்தார்.

வடக்கின் பிரிவினைவாத பயங்கரவாதம், உலக உணவு நெருக்கடி, எரிபொருள் விலை உயர்வு மற்றும் பல்வேறு வெளிநாட்டு அழுத்தங்கள் ஆகிய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு அரசாங்கம் இதுவரை காலம் முன்னோக்கி வந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

### பொன்சேகா...

பல மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியே இன்று உலக தலைவர்கள் மத்தியில் மிகவும் எளிமையானவராக திகழ்கிறார். ஆனால், எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் வெளிநாடுகளுக்கு ஓடிக்கொண்டிருப்பதாக பந்துல ஜெயசேகர குற்றம் சுமத்தினார்.

சரத் பொன்சேகாவின் நெருங்கிய உறவினர் இறந்தபோது அதில் பங்கேற்பதற்கு சரத் பொன்சேகாவுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஜனாதிபதி அனுமதியளித்தார் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

### சுயாதீனமாக...

அதிருப்தி அளிப்பதாக உள்ளதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கட்சி மறுசீரமைப்பு குறித்து நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றபோதிலும், அவை நடைமுறைப்படுத்தபடுவதில்லை என பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். இதனால் சுயாதீனமாக இயங்கத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்குது குறித்து தமக்கு எதுவும அறிவிக்கப்படவில்லை என காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்சியில் கருத்து முரண்பாடு நிலவுகின்றமை உண்மை என அவர் ஒப்புக்கொண்டுள்ளார். கட்சி உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்வதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்மொழியைப்...

நாம் இருள் சூழ்ந்த ஒரு காலகட்டத்தில் இருந்தோம். தற்போது ஒளிமயமான ஒரு காலகட்டத்தின் ஆரம்பத்தில் இருக்கின்றோம். எனவே நாடு சுபீட்சமடைய வேண்டுமாயின் சகல தரப்பினரும் சமாந்தரமாக முன்னேறவேண்டும். ஒரு தரப்பு மட்டும் பின்னிற்க முடியாது.

அவ்வாறாயின் மட்டுமே ஜனாதிபதியின் இலக்கான ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக எமது நாட்டை மாற்றமுடியும். ஜனாதிபதிக்கு ஓர் இலக்கு இருக்குமாயின் அதற்கு இசைவான ஓர் இலக்கு அரசியல்வாதிகளான எம்மிடமும் இருக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### நாடாளுமன்ற...

பெயர்களை வழங்க முடியாதென கூட்டமைப்புப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் அரசு - கூட்டமைப்பு பேச்சு எதிர்காலத்தில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான ஒரு நிலையிலேயே இது விடயமாக ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடுவதற்கு கூட்டமைப்பினர் தீர்மானித்துள்ளரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அரச தரப்புடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளின்போது இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு எட்டப்படால் மட்டுமே, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கவுள்ள கூட்டமைப்பு உறுப்பினர்களின் பெயர்களை வழங்கமுடியுமென நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.




### முஸ்லிம் பிரதி நிதித்துவம்...

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முனைப்புக்களின் சகல விடயங்களிலும் முஸ்லிம் பிரதிநிதித்துவம் அவசியமானது. தனிப்பட்ட ஓர் கட்சியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் அரசாங்கத்தினால் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. அரசியல் தீர்வுத்திட்டம் பல்வேறு இன சமூகங்கள் தொடர்பான பிரச்சினை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே சாலச் சிறந்தது என்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு.

குறிப்பாக சகல தரப்பினருடனும் முஸ்லிம் சமூகம் பேச்சுவார்த்தை நடத்தக் கூடிய சந்தர்ப்பம் இதன் மூலம் ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு நேரத்தை விரயமாக்கும் செயற்பாடு என சிலர் கருதுகின்றமை துரதிஷ்டவசமானது.

இரு தரப்பு பேச்சுவார்த்தைகளின் போது சகல இன சமூகங்களினதும் அபிலாஷைகளை முன்னிலைப்படுத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

### ஆணைக்குழுவின்...

கோரியுள்ளது. இதேவேளை, ஜெனிவாவில் அடுத்த வருடம் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கை விவகாரம் குறித்து விவாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அதனை எதிர்கொள்வதற்காக அரசாங்கம் கடுமையாக உழைக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டிசம்பர் மாதம் பொதுவாக விடுமுறைக் காலமாக அமைகின்ற போதிலும், அரசாங்கத்திறகு அவ்வாறு இருக்காது எனவும் எதிர்வரும வாரங்களில் அரசாங்கம் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர், இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் தற்பாதுகாப்பு தந்திரோயபாயங்களை வகுக்கவேண்டிய நிலையில் அரசாங்கம் உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை

(செட்டிக்குளம்)

செட்டிகுளம் மெனிக்பாம் நலன்புரி முகாமில் உள்ள மாணவர்கள் தொடர்ச்சியாக ஆசிரியர் பற்றாக்குறைக்கு முகம் கொடுத்து வருவதாகவும், இதனால் அவர்களது கல்வி பாதிக்கப்பட்டிருப்பதாகவும் ஐ.நா.வின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனந்தகுமாரசாமி, கதிர்காமர் ஆகிய இரண்டு முகாம்களில் உள்ள 1500 மாணவர்களுக்கு 60 ஆசிரியர்கள் மாத்திரமே கல்வி கற்பிப்பித்து வருகின்றனர்.

ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் தெரிவித்தனர்.

சரியாகப் பாடங்கள் நடைபெறாத காரணத்தினால் தம்மால் உரிய முறையில் பரீட்சைக்குத் தயார் செய்ய முடியாதிருப்பதாக மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமைச் சேர்ந்த குடும்பங்கள் கட்டம் கட்டமாக மீள்குடியேற்றத்திற்காக அழைத்துச் செல்லப்படுகின்றார்கள். இந்தக் குடும்பங்களுடன் ஆசிரியர்களும் அங்கிருந்து வெளியேறி வருவதனால், அங்கு ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைய நேர்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இந்த முகாம் மூடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததனால், இந்த மாணவர்களுக்குரிய பரீட்சை நிலையம் கூட மீள் குடியேற்றப் பகுதியாகிய முல்லைத்தீவிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும், எனினும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாகக் கடந்த மாத இறுதிப்பகுதியிலேயே மெனிக்பாம் மாணவர்களுக்குரிய பரீட்சை நிலையத்தை அங்கேயே அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, கல்விப் பொதுத் தராதரப் (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி சிறப்பு ஏற்பாடாக அவர்களைப் பரீட்சைக்குத் தயார் செய்வதற்கான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் ஏழாயிரத்துக்கும் குறைவானவர்களே இப்போது இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

# தங்கக் கட்டிகளைக் கடத்திய தம்பதிகள் கைதாகினர்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சட்ட விரோதமான முறையில் இந்தியாவிற்கு தங்கக் கட்டி களை கொண்டு செல்ல முற்பட்ட கணவன்-மனைவியை கட்டுநாயக்க சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் மேற்படி இருவர் மீதும் சந்தேகம் கொண்ட விமான நிலையச் சுங்க அதிகாரிகள் அவர்களுடைய கைப்பையைச் சோதனையிட்டபோது அதில் 29 இலட்சம் ரூபா பெறுமதியான 63.5 கிராம் நிறையுடைய தங்கக் கட்டிகளை வைத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருவரும் கண்டிப் பிர் தேசத்தைச் சேர்ந்தவர்கள் என ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருவரையும் விசாரணைக் குட்படுத்தியதன் பின்னர் குறித்த தங்கக் கட்டிகளை அரசுடைமை ஆக்கியதுடன் இருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

# பொன்சேகா குறித்த மங்களவின் கருத்தை முழுமையாக நம்பாத அமெரிக்கா

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான •மங்கள சமரவீரவின் கருத்துக்களை அமெரிக்கா முழுமையாக நம்பவில்லை என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற காலத்தில் முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனாதிபதி வேட்பாளருமான சரத் பொன்சேகா தொடர்பில் மங்கள வெளியிட்ட கருத்துக்கள் குறித்து அமெரிக்கத் தூதரகம் இவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகா தொடர்பில் மங்கள சமரவீர வெளியிட்ட சில கருத்துக்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்றே கருதுகின்றோம் என அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டனிசிற்கும், மங்கள சமரவீரவிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு தொடர்பான தகவல்கள் இவ்வாறு அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் எண்ணம் மற்றும் தந்திரோபயங்கள் பற்றி மிகவும் துல்லியமான அறிவினை மங்கள கொண்டிருப்பதாக புட்டினிஸ் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு மங்கள ஆதரவளிப்பதனை, ஆபத்தாகவே ஆளும் கட்சி கருதுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ தமிழ் மக்களின் ஆதரவினை இழந்து வருவதாகவும், சரத் பொன்சேகாவிற்கு சிறுபான்மை மக்கிடையே செ[illegible] வாக்கு அதிகரித்துள்ளதாகவும் புட்டினஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தல், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் போன்றன தொடர்பிலும் சரத் பொன்சேகா தரப்பினர் உறுதி மொழிகளை வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# சூதாட்ட நிலையங்கள் இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சூதாட்ட நிலையங்கள் அதிகரித்துக் கொண்டு செல்வதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார். இறக்குவான விகாரை ஒன்றில் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் போது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே சூதாட்ட நிலையங்கள் காணப்பட்டதாகவும் தற்போது பௌத்த விகாரைளுக்கு பதிலாக சூதாட்டநிலையங்கள் அதிகளவில் திறக்கப்படுவதாகவும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

ஆனால், தற்போதைய அரசாங்கம் எதுவித கட்டுப்பாடுகளும் இன்றி பாரிய அளவில் சூதாட்ட நிலையங்களை நடத்தி வருவதாகவும் இதன் காரணமாக குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாகவும் ரணில் தெரிவித்துள்ளார்.

# பிச்சைக்காரரைக் கொன்ற பிச்சைக்காரர் பிடிபட்டார்

பிச்சைக்காரர்கள் பலர் தொடர்ச்சியாக கொல்லப்பட்டமை தொடர்பாக பல பெறுமதியான தகவல்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக்கொலைகள் தொடர்பாக பிச்சைக்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கொட்டாஞ்சேனை, பேலியகொடை, கொம்பனித்தெரு, மருதானை, கிரிபத்கொடை, களனி, பம்பலப்பிட்டி, கல்கிஸை பகுதிகளில் 15 பிச்சைக்காரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இப்பிச்சைக்காரர்கள் மேற்படி பகுதிகளில் பிச்சையெடுப்பதை சந்தேக நபர் விரும்பாததால் இக்கொலைகளை செய்துள்ளதாக கூறப்படுகிறது. பிச்சைக்காரர்கள் பிச்சையெடுப்பதற்கு தத்தமக்கென இடங்களை ஒதுக்கிக்கொள்வதுண்டு.

இச்சந்தேக நபர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் ஆவார். இவர் தான் காதுகேளாதவர் போல் நடிப்பதற்கு ஆரம்பத்தில் முற்பட்டுள்ளார்.

எனினும் இரத்மலானையிலுள்ள செவிபுல, கட்புல குறைபாடுடையோருக்கான பாடசாலையில் நடத்தப்பட்ட சோதனை மூலம் இவர் காதுகேளாதவர் அல்லர் எனத் தெரியவந்துள்ளது.

# வர்த்தக நிலையங்களுக்கு தனித்தனி காவலர்கள்

(நல்லூர்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காவலாளியை நியமிப்பதற்கு வர்த்தகர்கள் தீர்மானித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு பாலாலி வீதி தபால் பெட்டிச் சந்தியில் இருந்து திருநெல்வேலி சந்தைக் கட்டடத் தொகுதிக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையங்கள் வரை சுமார் 7 வர்த்தக நிலையங்கள் திருடர்களால் உடைக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக கடந்த வெள்ளிக்கிழமை மாலை திருநெல்வேலிப் பகுதி வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும், பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கும் இடையிலான சந்திப்பு திருநெல்வேலி இராணுவ முகாமில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின்போது திருநெல்வேலிப் பகுதியில் கடந்த பல வருடங்களாக இவ்வாறான மோசமான சம்பவம் இடம்பெறவில்லை எனவும், தற்போதைய சூழலில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது தமக்கு ஆச்சரியம் அளிப்பதாகவும், இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளோரை கண்டு பிடிக்கப் படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இக்கலந்துரையாடலின் போது வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தமது வர்த்தகநிலையங்களின் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கத்தில் காவலாளிகளை நியமிக்கும் தீர்மானத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (26)

# சுற்றுலாப் பெண்கள் விபசாரத்தில்

இலங்கைக்கு ஆசிய நாடுகளில் இருந்து வரும் பெண் பயணிகள் சுற்றுலாத்துறை என்ற போர்வையில் விபச்சார நடிவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் கருத்தை ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். இப்பெண்கள் 3 மாதகால சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருவதாகவும் பல்வேறு இடங்களில் விபசாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தென்பகுதியில் அமைக்கப்படும் வெளிநாட்டு தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

இந்தியாவின் சீனிக்கம்பனி உட்பட மூன்று வெளிநாட்டுக் கம்பனிகளை தென்னிலங்கை பொருளாதார வலயத்தில் அமைக்கவுள்ளதாக உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய சீனிக்கம்பனி, சிங்கப்பூர் பெற்றோ இராசாயனக் கம்பனி, பாகிஸ்தான் சீமெந்துக்கம்பனி ஆகிய கம்பனிகளை தென்னிலங்கையில் இந்த மாதத்தில் அமைக்க எதிர்பார்ப்பதாக துறைமுக அதிகார சபைத் தலைவர் பிரியத் பந்து விக்கிரம கூறினார்.

இலங்கையில் மூன்று தசாப்தகாலமாக நிலவிய யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் 6 பில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்துள்ளது.


# 9 தொழிற் சங்கத் தலைவர்கள் ஜே.வி.பி.யால் நீக்கப்பட்டனர்

ஜே.வி.பி. சார்பு தொழிற்சங்கங்களின் 9 தலைவர்கள் அப்பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் மாற்றுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஆர்.எம். டபிள்யூ. ரணசிங்க, செயலாளர் ரி.ஈ. இயன்சந்திரகுமார், அனைத்து கம்பனி ஊழியர் சங்கத்தின் சிரேஷ்ட தலைவர் ரஞ்சித் பியதிலக்க, உபதலைவர் உபுல் விஜேசிங்க, இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் தலைவர் எச்.எம். தர்மதாஸ, அதன் மத்திய மாகாண செயலா ளர் ஏ.பி. கங்கொட, இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் பிரதி பொதுச்செயலாளர் எல். பி.கே. கொகாமுல்ல, அகில இலங்கை போக்குவரத்து ஊழியர்கள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் டபிள்யூ. வசந்த பியதாஸ, உள்ளூராட்சி துறை தொழிற்சங்கங்களின தலைவர் மதுர கமகே ஆகியோரும் இவர்களில் அடங்குவர்.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து தொழிற்சங்க அங்கத்தவர்களுக்கு இத்தலைவர்கள் அறிவுறுத்துவர் என டாக்டர் ரணசிங்க தெரிவித்தார்.

# 'லக்பிம' ஆசிரியர் மீது தாக்குதல் என முறையீடு



(கொழும்பு)

கொழும்பு, கறுவாத்தோட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சட்டத்தரணிகளுக்கான வருடாந்த ஒன்றுகூடல் வைபவத்தின்போது, தான் தாக்குதல்களுக்குள்ளானதாக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் லக்பிம செய்திப் பத்திரிகையின் ஆசிரியர் ராஜ்பால் அபேநாயக்க முறைப்பாடு செய்துள்ளார்.

முன்னாள் நீதியரசர் சரத் என். சில்வா குறித்து கருத்து வெளியிட்டமை காரணமாகவே தான் தாக்கப்பட்டதாக சட்டத்தரணியான லக்பிம செய்தி ஆசிரியர் ராஜ்பால் அபேநாயக்க தெரிவித்துள்ளார்.

தாக்குதல் சம்பவத்தின் போது ராஜ்பால் அபேவிக்கிரமவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. குறித்த நபர் எனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தார். இது தொடர்பில் நான் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன் என அவர் கூறினார்.

விசாரணை நிலுவையிலுள்ளதெனக் கூறிய கொள்ளுப்பிட்டி பொலிஸார், இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.